Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 131 | புதன்கிழமை 06 ஏப்ரல் 2022 | பங்குனி 23 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை : ரூ.40

## ஒரே நாளில் பதவி துறந்தார் நிதி அமைச்சர் அலி சப்ரி

*தேசியப் பட்டியல் உறுப்பினரிலிருந்தும் விலக முடிவு*

கொழும்பு, ஏப். 6

நிதி அமைச்சுப் பதவியிலிருந்து விலகுவதாக அலி சப்ரி, ஜனாதிபதிக்கு 16 ➤

## வீடுகளிலிருந்து தப்பியோடி ஹோட்டல்களில் தஞ்சம்!

*அமைச்சர்களுக்கு இந்தக் கதி*

கொழும்பு, ஏப். 6

நாடெங்கும் வெடித்துள்ள மக்கள் போராட்டங் 15 ➤

## எரிபொருள், எரிவாயு வருகை

கொழும்பு, ஏப். 6

3 ஆயிரத்து 750 மெற்றிக்தொன் சமையல் எரிவாயு தாங்கிய கப்பல் நேற்று பிற்பகல் நாட்டை வந்தடைந்தது. அதேநேரம், 40 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருள் தாங்கிய 16 ➤

# பெரும்பான்மையை இழந்தது அரசாங்கம்?

- எந்தத் தரப்புக்கும் பெரும்பான்மையில்லை
- ராஜபக்ச கூட்டிலிருந்த 40 எம்.பி.க்கள் சுயாதீனமாகச் செயற்படப் போவதாக அறிவிப்பு
- நாட்டு நிலைமை தொடர்பில் இன்றும், நாளையும் விவாதம்

கொழும்பு, ஏப்ரல் 6

மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துடன் இருந்த ராஜபக்ச அரசாங்கத்தின் சாதாரண பெரும்பான்மையே கேள்விக்குறியாகியுள்ளது. ராஜபக்சகூட்டிலிருந்த 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாகச் செயற்படவுள்ளதால் எந்தவொரு தரப்புக்கும் நாடாளுமன்றப் பெரும்பான்மை கிட்டவில்லை. இதனால் நாடாளுமன்றம் அதன் உறுதிப்பாட்டை இழந்துள்ளது. 15 ➤

## அவசரகாலச் சட்டம் நீக்கம்!

கொழும்பு, ஏப். 6

பல தரப்புக்களின் எதிர்ப்பையடுத்து அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்றுமுன்னிரவு வெளியிடப்பட்டது. கடந்த முதலாம் திகதி நடைமுறைப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டத்துக்கு 15 ➤

## பெரும்பான்மை எங்களிடமே!

*பதவி விலகோம் என்கிறார் சபை முதல்வர் தினேஷ்*

(விரிவு - பக்:2)

## பிரதமரின் இல்லம் நேற்றும் முற்றுகை

*கொட்டும் மழைக்குள்ளும் திரண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள்*

கொழும்பு, ஏப். 6

கொழும்பு விஜேராம மாவத்தையிலுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் இல்லம் நேற்று 15 ➤

## இலக்கத்தகடற்ற மோட்டார் சைக்கிள்களில் துப்பாக்கிகளுடன் நுழைந்தோரை விரட்டினர் போராட்டக்காரர்கள்!!!

*பொலிஸாருடனும் துப்பாக்கிதாரிகள் முறுகல்*

கொழும்பு, ஏப். 6

நாடாளுமன்றத்தைச் சுற்றி நேற்றுமுன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் போது, இலக்கத்த 15 ➤



## பெரும்பான்மையை நிரூபிக்க அரசைக் கோரும் பிரேரணை

*விரைவில் வரலாம்*

கொழும்பு, ஏப். 6

அரசாங்கத்திலிருந்து 40 பேர் வெளியேறியுள்ளபோதும், தமக்கே பெரும்பான்மை இருக்கின்றது என்று தெரிவித்துள்ள நிலையில், அர 16 ➤




## ஓயாத அலை!

கொழும்பு, ஏப். 6

இலங்கை அரசுக்கு எதிராக நாட்டின் முக்கிய நகரங்களில் நேற்றும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. தலைநகர் கொழும்பில் பல பகுதிகளிலும் இரவிர 15 ➤

## இலக்கத்தகடற்ற மோ. சைக்கிளில் நுழைந்தது இராணுவத்தினரே!!!

*அவர்களுக்கு இடையூறு விளைவித்தனராம் பொலிஸார் விசாரணை மேற்கொள்ள இராணுவத் தளபதி கோரிக்கை*

கொழும்பு, ஏப். 6

நாடாளுமன்றத்தைச் சுற்றி நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத் 15 ➤

## நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை உடனடியாகவே ஒழிக்கப்பட வேண்டும்

*ஒரு வாரத்துக்குள் செயற்படுத்துங்கள் கோருகிறார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்*

கொழும்பு, ஏப். 6

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கான காலம் உருவாகி 16 ➤

## போராட்ட துளிகள்

- சட்டத்தரணிகளால் சட்டமா அதிபர் அலுவலகம் முற்றுகை
- சுற்றுலாவிகளும் போராட்டத்தில் குதிப்பு
- கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் களத்தில்
- கண்டி, கொலன்னாவவில் சுகாதாரப் பணியாளர்கள் போராட்டத்தில்
- பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களும் கவனவீர்ப்பு
- நாடாளுமன்றமும் நேற்று முற்றுகை
- ஹோர்ன் எழுப்பி வாகன ஓட்டிகள் போராட்டம்
- பேரணிகளில் பப்ரே இசை

SLT-MOBITEL MOBILE
PREPAID
மற்றும்
POSTPAID
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்,
SLT-Mobitel Mobile Non-Stop லொக்கா
இதயம் போதும் எனும் வரை SCROLL செய்யுங்கள்
விரல்கள் போதும் எனும் வரை CHAT செய்யுங்கள்
கண்கள் போதும் எனும் வரை VIDEO பாருங்கள்
நீங்கள் விரும்பும் 9 App இற்கும் வேண்டியளவு data மற்றும் மேலதிகமாக 2GB.
398 ரூபா இற்கு #170# அழைத்து அல்லது SELFCARE APP ஊடாக இப்போதே அக்டிவ் செய்யுங்கள்.
www.sltmobitel.lk
SLTMOBITEL

noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


அரசாங்கத்துக்கு எதிராக

# வவுனியா பல்கலையின் மாணவர்கள் போராட்டம்

**வவுனியா, ஏப். 6**

**அரசாங்கத்துக்கு எதிராக வவுனியா பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

வவுனியா காமினி மகா வித்தியாலயத்துக்கு முன்பாக ஆரம்பமான பேரணி மருத்துவமனை சுற்றுவட்டம் கடைவீதியூடாக மணிக்கூட்டுக் கோபுரத்தை வந்தடைந்து, அங்கிருந்து பழைய பேருந்து நிலையத்தைச் சென்றடைந்தது.

இதன்போது ஜனாதிபதி கோத்தாபய மற்றும் அரசாங்கத்துக்கு எதிராக மாணவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தால் ஏ-9 வீதிப் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு முன்பாக மாணவர்கள் நீண்ட நேரமாக அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு 'தமிழ் விருட்சம் அமைப்பு' மற்றும் முச்சக்கரவண்டி சாரதிகள் குடிதண்ணீர்ப் போத்தல்களை வழங்கி ஆதரவை தெரிவித்திருந்தனர். (க-110)

# நாட்டு நிலைமைக்கு மஹிந்தவே காரணம்

## குமார வெல்கம கொதிப்பு

கொழும்பு, ஏப். 6

நாட்டின் தற்போதைய நிலைமைக்கு, பிரதமர் மஹிந்த ராஜபக்சவே முழுக்காரணம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டின் ஜனாதிபதி வேட்பாளராக கோத்தாபய ராஜபக்ச முன்னிறுத்தப்பட்ட போது முதலில் அதனை எதிர்த்தவன் நான்.

அவர் அரசியலில் ஈடுபட்டதில்லை. எனவே அவருக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டாமென்று நான் கூறியபோது மஹிந்த ராஜபக்ச கேட்கவில்லை. அவரது குடும்ப உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதியாக வேண்டுமென்ற எண்ணத்தில் அவர் தவறான முடிவை எடுத்தார். அதனால் இன்று முழு நாடும் பற்றி எரிகின்றது -என்றார். (க-இ)

# ஆளும்கட்சி வசம்தான் பெரும்பான்மை உண்டு

## இல்லையென நிரூபித்தால் ஆட்சியைத் தருவார்களாம்

நாடாளுமன்றத்தின் பெரும்பான்மைப் பலம் இன்னமும் ஆளுங்கட்சி வசம்தான் உள்ளது. அவ்வாறு இல்லையென எதிரணி நிரூபிக்குமானால், அடுத்தக்கட்ட நகர்வுகளை மேற்கொள்வதற்கு அரசு தயார் என்று சபை முதல்வரும், அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'ஜனாதிபதி அரசமைப்பை மீறி ஒருபோதும் செயற்படமாட்டார். அதனால்தான் அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளார். எனவே, நெருக்கடி நிலைமை உக்கிரமடைய இடமளிக்க வேண்டாம்.

மக்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை எங்களுக்கும் புரிகின்றது. யோசனைகள் இருப்பின் முன்வைக்கவும். அரசமைப்பைமீறி எந்தவொரு தரப்பாலும் செயற்படமுடியாது. தற்போதைய சூழ்நிலையில் அரசு வசம்தான் பெரும்பான்மை உள்ளது. இல்லையென நிரூபித்தால் அடுத்த கட்டம் பற்றி சிந்திக்கலாம்.

ஒன்று நாடாளுமன்றத்தில் தீர்மானமொன்றை நிறைவேற்றி, பொதுத் தேர்தலுக்குத் செல்லலாம். அவ்வாறு இல்லையெனில் எதிரணிக்குதான் போதுமானளவு பெரும்பான்மை உள்ளதெனில், ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்பை ஜனாதிபதியிடம் கோரலாம்' -என்றார். (ம-44)



# முஷாரப் உரையாற்றுகையில் ரூ.5,000 நீட்டிய சாணக்கியன்

## சமூக வலைத்தளங்களில் ட்ரெண்ட்

கொழும்பு, ஏப். 6

நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் சபையில் உரையாற்றுகையில், 'பணத்துக்காக கூவ வேண்டாம்' என்ற தொனியில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் 5 ஆயிரம் ரூபா பணத்தை நீட்டி கலாய்த்ததால் இருவருக்கும் இடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

இதன்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடி நிலைமை தொடர்பில் ஆளும் மற்றும் எதிரணி உறுப்பினர்கள் கருத்துகளை முன்வைத்தனர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப்பும் கருத்துகளைக் முன்வைத்தார். மக்கள் தன்னெழுச்சியாகவே போராடுகின்றனர். சந்தர்ப்பவாத அரசியலை நடத்த வேண்டாம் - என்றார். அவ்வேளையிலேயே எழுந்து அவர் முன் 5 ஆயிரம் ரூபாவை சாணக்கியன் நீட்டினார். இதனால் கடுப்பான முஷாரப், நான் டயஸ் போராக்களின் பணத்தை பெறவரவில்லை, பட்டினியால் வாடும் மக்களுக்காகவே பேசுகின்றேன் -என்றார். அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஊடாக நாடாளுமன்றத்துக்கு தெரிவான முஷாரப் 20ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவளித்தார். தற்போது அரசுக்கு சார்பான எம்.பியாகவே செயற்பட்டுவருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-44)

# இலங்கையின் வரலாற்றில் இது முக்கியமான கட்டத்தில்

## அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 6

இலங்கை தனது வரலாற்றில் ஒரு முக்கியமான கட்டத்தில் நிற்கின்றது என்று தெரிவித்தார் இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சுங்.

அவர் தனது ருவிற்றர் பதிவில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை தனது வரலாற்றில் ஒரு முக்கியமான கட்டத்தில் நிற்கின்றது. இந்தத் தருணத்தில், ஒவ்வொருவரின் குரலும் முக்கியமானதே. எதிர்ப்பாளர்களை அமைதியுடன் இருக்குமாறும், அவர்களின் குரல்கள் மற்றும் ஒற்றுமையைப் பயன்படுத்தி மாற்றத்துக்காக எடுக்கப்படும் முயற்சிகளையும் நான் வரவேற்கிறேன். இதற்கான தீர்வை விரைவாகக் கண்டறிந்து நடைமுறைப்படுத்தி, இலங்கை மக்களின் மனதை வெல்லுமாறு அரசாங்கத்தைக் கோருகிறேன் -என்றார். (ம)

# மக்கள் விருப்பப்படி அரசை அமைக்குக


## அநுரகுமார தெரிவிப்பு

மக்கள் விருப்பப்படி அரசொன்று அமைக்கப்பட வேண்டுமென்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார் .

நாடாளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் கூறியவை வருமாறு;-

'நிறைவேற்று அதிகாரம் மற்றும் நாடாளுமன்ற அதிகாரத்தை மக்கள் நிராகரிக்கின்றனர். இதனை நாம் ஏற்கவேண்டும். அதனால் தான் அமைச்சர்கள் பதவி துறக்கின்றனர். ஜனாதிபதி பதவி விலக வேண்டுமென வலியுறுத்துகின்றனர். எனவே, சர்வகட்சி அரசு என்ற பொறிமுறையை மக்கள் நம்பமாட்டார்கள். அதனை நிராகரித்துள்ளனர். தற்போது மக்களின் நம்பிக்கைதான் முக்கியம். இந்த ஆட்சி இல்லாவிட்டால், மற்றைய தரப்புக்கு ஆட்சி கையளிக்கப்பட வேண்டும். ஆக இந்தப் பிரச்சினைக்கு அரசமைப்பு ரீதியில் தற்போது தீர்வு இல்லை. எனவே, அரசமைப்புக்கு வெளியில் சென்று தீர்வைத் தேட வேண்டும். அதற்கான வழிமுறைகளை ஆராயவேண்டும். அவ்வாறு கண்டறியும் தீர்வை அரசமைப்புக்குள் உள்வாங்கலாம், அதற்கான யோசனையை முன்வைக்கலாம். அதற்கு மக்கள் ஆணையே சிறந்த வழி. எனவே, மக்களின் விருப்பத்துக்கேற்பவே அரசு அமைக்கப்பட வேண்டும் - என்றார். (ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# களத்தில் கர்தினால்

கொழும்பு, ஏப். 6

**அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் நேற்றுக் காலையும் தீவிரம் பெற்றிருந்தன. பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டார்.**



இலங்கையில் கடந்த மூன்று தினங்களாக அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் தீவிரம் பெற்றுள்ளன. நாடாளுமன்ற அமர்வு நேற்றுக் காலை இடம்பெற்றுக்கொண்டிருந்தபோதும் போராட்டங்கள் முடிந்தபாடில்லை. கத்தோலிக்க திருச்சபையின் இலங்கைக்கான பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் நேற்று போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்டார். ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதிகேட்டு அண்மையில் சர்வதேசத்தின் உதவியை நாடியிருந்த பேராயர் கர்தினால், அரசாங்கத்துக்கு எதிராகக் கடும் விமர்சனங்களையும் முன்வைத்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## விமான நிலையங்களை மூடுங்கள் இல்லையேல் திருடர்கள் ஓடிவிடுவர்

### விஜித எம்.பி. காட்டம்

கொழும்பு, ஏப். 6

ஊழல்வாதிகளும் திருடர்களும் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுக்க, அனைத்து விமான நிலையங்களும் மூடப்பட வேண்டுமென்று மக்கள் விடுதலை முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

நாடாளுமன்றம் நேற்றுக்கூடியபோது, விசேட அறிக்கையை விடுத்த நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

(ம-க-இ)

## பதவி விலகினார் பிரதி சபாநாயகர்

கொழும்பு, ஏப். 6

நாடாளுமன்ற பிரதி சபாநாயகர் பதவியை இராஜினாமா செய்துள்ளார் ரஞ்சித் சியம் பலாபிட்டிய.

அரசுக்கு எதிராக போராட்டங்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில், பலர் அமைச்சுப் பொறுப்புக்கள், இராஜாங்க அமைச்சு பொறுப்புக்கள் மற்றும் உயர் பதவிகளில் இருந்து விலகி வருகின்றனர். அந்தவகையில் பிரதி சபாநாயகரும் பதவி விலகியுள்ளார். (ம-4-இ)

## நெருக்கடியில் சிக்கியுள்ள மக்களை சட்டங்களால் ஒடுக்க இடமளிக்கோம்

### சமத்துவக் கட்சி தெரிவிப்பு

கிளிநொச்சி, ஏப். 6

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்ற மக்களை அவசர காலச்சட்டம் உள்ளிட்ட ஜனநாயக விரோதச் சட்டங்களால் மேலும் ஒடுக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது என்று சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

மிகப் பெரிய எதிர்பார்ப்புக்களோடும், நம்பிக்கையோடும்தான் இந்த அரசை மக்கள் தெரிவு செய்திருந்தனர். இரண்டு ஆண்டுகளுக்குள் அந்த நம்பிக்கையில் ஏற்பட்டிருக்கும் சரிவை மக்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இதனாலேயே மக்கள் வீதியில் இறங்கி தமது உணர்வுகளை வெளிப்படுத்துகின்றனர்.

இந்த நிலையில் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அரசும் துரிதகதியில் தீர்வு காணும் நடவடிக்கையில் இறங்க வேண்டும்.

**“சட்டங்களால் மக்களின் உரிமைகளைக் கட்டுப்படுத்தி நெருக்கடிக்குள்ளாக்குவதற்குப் பதிலாக நெருக்கடிகளுக்கு தீர்வு காண அரசு முன்வரவேண்டும்...”**

மாறாக நாளாந்த வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியோடு சட்ட ரீதியான நெருக்கடியையும் ஏற்படுத்தினால் மக்களின் கோபம் எல்லை மீறி விடும். அது நாட்டைப் பலவீனப்படுத்தும். எனவே சட்டங்களால் மக்களின் உரிமைகளைக் கட்டுப்படுத்தி நெருக்கடிக்குள்ளாக்குவதற்குப் பதிலாக அனைத்துத் தரப்பினரின் பங்கேற்போடும் ஒத்துழைப்போடும் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண அரசும் முன்வரவேண்டும் -என்றுள்ளது. (ம-4-214)




**கொழும்பில எல்லா அமைச்சர்மாரும் தங்கட பதவியை போன ஞாயிற்றுக்கிழமை இரவு ரிசைன் பண்ணினவையெல்லோ. அந்தச் சம்பவம் நடந்த கொஞ்ச நேரத்தில நம்பிக்கையான வட்டாரத்தில இருந்து ஒரு தகவல் கிடைச்சிது. 'உடனடியாக இடைக்கால தேசிய அரசாங்கத்தை அமையுங்கோ' எண்டு கோத்தாபயவுக்கு ஒரு கடிதத்தை 6 தமிழ்க் கட்சிகள் அனுப்ப ஏற்பாடு நடக்குது எண்டதுதான் அந்தத் தகவல். இப்பிடிக் கடிதம் அனுப்பிறதில கூட்டமைப்பில இருந்து 'இந்தா போறன், அந்தா போறன்' எண்டு விளையாட்டுக் காட்டிக் கொண்டிருக்கிற கட்சிக்காரர்தான் மும்முரமா நிக்கினம் எண்டும் தெரிய வந்திச்சு. உடனேயே அது சம்பந்தமா அந்தக் கட்சியின்ர பேச்சாளருக்கு மீடியாக்காரர் போன் எடுத்தினம். ஆனா ஆள் எடுக்கேலை. பிறகு அந்த 6 தமிழ்க்கட்சிகளில மிச்சமுள்ள சில கட்சி ஆக்களை விசாரிக்க, அவையும் அப்பிடி ஒரு ஏற்பாடு நடக்குது எண்டு சொல்ல, அது உதயனில செய்தியாவும் வந்திட்டு.**

**விடிய அந்தக் கடிதம் எழுதுற ஏற்பாடு செய்த கட்சியின்ர பேச்சாளர் மீடியாக்காரருக்கு போன் பண்ணி, 'அப்பிடி ஒரு அலுவல் நடக்குதுதான். அது சம்பந்தமா இண்டைக்கு ஒரு மீட்டிங் இருக்கு' எண்டு சொல்லியிருக்கிறார். ( அந்தக் குரல்பதிவு மீடியாக்காரரிட்ட இருக்கிறது வேற கதை) ஆனால் அதுக்கு பிறகு நடந்ததுதான் பெரும் கூத்து. அந்தக் கட்சி சார்பில, மாகாண சபை மெம்பரா குருட்டு லக்கில கடைசி நாலைஞ்சு மாசம் இருந்த ஒருத்தர், 'பொய்ச்செய்தி போடுறாங்கள், அரசாங்கத்தோட டீலிங்' எண்டெல்லாம் வாய்க்கு வந்தபடி தன்ர பேஸ்புக்கில புலம்பத் தொடங்கிட்டார். கொஞ்ச நேரத்தில அந்தக் கட்சியின்ர பேச்சாளரும் பேப்பருக்கு போன் எடுத்து 'உப்பிடி ஒண்டும் நடக்கேலையே. ஏன் இப்பிடி போட்டனீங்கள்?' எண்டு கேட்டு ஒரு மறுப்பு அறிக்கையும் அனுப்பினார்.**

**சரி, முதல் நாள் இரவிரவா ஜனாதிபதிக்கு கடிதம் எழுத ஓடித் திரிஞ்சவை ஏன் விடிஞ்சு கொஞ்ச நேரத்தில இப்பிடி பல்டி அடிச்சவை? அந்தச் செய்தியில 6 கட்சியள் கடிதம் அனுப்ப வெளிக்கிட்டவை எண்டுதான் போட்டிருக்கு. மிச்ச 5 கட்சியளும் பேசாமல் இருக்க, இந்த ஒரு கட்சி மட்டும் ஏன் இப்பிடி துள்ளிக் குதிக்க வேணும்? ஒருவேளை அது பொய்ச்செய்தி எண்டால் மிச்சக் கட்சியளும் எல்லோ மறுத்திருக்க வேணும். அவை பேசாமல் இருக்க, இவை மட்டும் ஏன் சுடுதண்ணி குடிச்சவை மாதிரி குறுக்க மறுக்க ஓடோணும்? அதுக்கு காரணமிருக்கு. அவைக்கு படியளக்கிற புலம்பெயரிகள், இந்தக் கடிதக் கதையை அறிஞ்சு, கட்சியின்ர தலைவருக்கு செம டோஸ் குடுத்திருக்கினம். அதாலதான் உதை பொய்ச்செய்தி எண்டு மாத்த அந்தக் கட்சிக்காரர் தலையால கிடங்கு கிண்டத் தொடங்கினவையாம். இந்த ரணகளத்துக்குள்ள கிளுகிளுப்பா ஒரு பப்ளிசிட்டி தேடுறதுக்கு கடிதம் எழுத வெளிக்கிட்டு, அது தங்களுக்கே சிக்கலாகினவுடன , பிளேட்டையே மாத்துற இவை எப்பிடி சனத்துக்கு உண்மையா இருப்பினம்? மக்களே, கொஞ்சம் உசாரா இருங்கோ.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் நிலைவரங்களை உன்னிப்பாக கவனிக்கிறோம்

## சர்வதேச நாணய நிதியம் அறிக்கை

**கொழும்பு, ஏப். 6**

**சர்வதேச நாணய நிதியம் இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார அபிவிருத்திகளை 'மிக நெருக்கமாக' அவதானித்து வருவதாகக் கூறியுள்ளது.**

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைப் பணித்தலைவர் மசாஹிரோ நோசாகி தற்போதைய தேசிய நெருக்கடி குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

பல தசாப்தங்களில் மோசமான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கையில் பொது அமைதியின்மை அதிகரித்து வருவதால், இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார முன்னேற்றங்களை சர்வதேச நாணய நிதியம் 'மிக நெருக்கமாக' கண்காணித்து வருவதாக நோசாக்கி அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

'இந்த மாத இறுதியில் வொஷிங்டனுக்கு புதிதாக நியமிக்கப்பட்ட நிதியமைச்சரின் வருகை உட்பட, அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் புதிதாக நியமிக்கப்பட்ட நிதியமைச்சர் அலி சப்ரி தனது பதவியில் இருந்து விலகியமையானது சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்களை கேள்விக்கு உள்ளாக்கியுள்ளது' என்று அந்த அறிக்கையில் நோசாகி மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)



# தீக்கிரையாகியது வீடு வாகனங்களும் நாசம்

யாழ்ப்பாணம், ஏப். 6

தீ விபத்தால், வீடொன்று முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. அத்துடன் வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மின் பிறப்பாக்கி இயந்திரம் என்பனவும் எரிந்து நாசமாகியுள்ளன.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் பாசையூர் இரண்டாம் குறுக்குத் தெரு பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது. தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். (ம-க-27,20,125)


# எகிறியது டொலர் பெறுமதி

கொழும்பு, ஏப். 6

இலங்கையில் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை நேற்று 303.49 ரூபாவாக பதிவாகியுள்ளது. அதே போன்று அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை 293.23 ரூபாவாக பதிவாகியுள்ளது.

இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களின்படி இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (க-இ)





# இலங்கைக்குக் கடத்தவிருந்த அரிய உயிரினங்கள் மீட்பு!

## இந்தியாவில் இருவர் கைது

சென்னை, ஏப். 6

இராமநாதபுரத்திலிருந்து இலங்கைக்குக் கடத்தவிருந்ததாகக் கூறப்படும் அரிய வகை இருதலை மணியன் பாம்பு மற்றும் 6 பச்சைக் கிளிகள் வனத்துறையினரால் மீட்கப்பட்டன.

அவற்றைக் கடத்த முனைந்தனர் என்ற குற்றச்சாட்டில் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒரு வாளியில் இருதலை மணியன் பாம்பு மற்றும் 6 பச்சைக் கிளிகளை சந்தேக நபர்கள் வைத்திருந்த நிலையிலேயே அவர்கள் கையும்மெய்யுமாகப் பிடிக்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் இருவரும் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் இந்திய வனத்துறையினர் தெரிவித்தனர். (ம-4,56)

# லஞ்சப் பொலிஸ் 'லபக்!'

யாழ்ப்பாணம், ஏப். 6

இலஞ்சம் பெற முயன்ற தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அதிரடியாகக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இளவாலை பொலிஸ் நிலையத்தில் கடமை புரியும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே, இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினரால் நேற்று மதியம் கைது செய்யப்பட்டுள்ளார். திருட்டுச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய சந்தேகநபரிடம் 30 ஆயிரம் ரூபாவைப் பெற்று, அவரை விடுவிப்பதற்கு மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார். மானிப்பாய் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம-க-26,27,125)

# சித்திரத் தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 6

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகியம்மன் ஆலயத்தில் இன்று புதன்கிழமை புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் காலை 8 மணிக்கு நடைபெறும்.

இந்தத் தேர் கலைக் விசுவநாதன் குடும்பத்தினரின் நிதிப் பங்களிப்புடன், திருநெல்வேலி சிற்பாச்சாரியரால் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-க-இ)

# மகாகும்பாபிஷேகம்

சாவகச்சேரி, ஏப். 6

தென்மராட்சி ஒட்டுவெளி முருகன் ஆலய மகாகும்பாபிஷேகப் பெருவிழா இன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. விழாவில் காரை எம்.பி.அருளானந்தன் ஆன்மீக அருளுரையை நிகழ்த்துவார் என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ம-14)





வரலாற்றுச் சிறப்புமிக்க தென்மராட்சி மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயத்தில் 3 ஆவது பங்குனித்திங்கள் உற்சவம் நேற்றுமுன்தினம் சிறப்புற இடம்பெற்றது. (படங்கள் ஐ.சிவசாந்தன்)

# பாலை மரக்குற்றி கடத்திய இருவர் கைது



கிளிநொச்சி, ஏப். 5

அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்கராயன் விநாயகர் குடியிருப்பில் உள்ள காட்டுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் பழைமை வாய்ந்த பாலை மரங்களை அழித்த குற்றச்சாட்டில் இரண்டு சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அக்கராயன் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து குறித்த பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டபோதே மேற்படி சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 15 மரக்குற்றிகளும் மரம்வெட்ட பயன்படுத்திய இயந்திரவாள் ஒன்றும் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து சந்தேகநபர்கள் இருவரும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று அக்கராயன் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-14,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அரசாங்கத்தைப் பதவி விலகுமாறு வலியுறுத்தி, வவுனியாப் பல்கலைக் கழக மாணவர்களால் நேற்று முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் மேலதிக ஒளிப்படங்கள்.



# கிழக்குப் பல்கலையிலும் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, ஏப். 6

நாட்டைத் தெருவுக்குக் கொண்டுவந்த அனைத்துத் திருடர்களையும் விரட்டியடிப்போம் எனும் தொனிப்பொருளில், மட்டக்களப்பு கிழக்குப் பல்கலைகழக மாணவர்கள் நேற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மின்சாரத்தைத் தடையின்றி வழங்கு, வாழ்கைச் செலவைக் குறை, மக்களை இருள் வாழ்கைக்குத் தள்ளாதே, மக்களை பட்டினிச் சாவுக்குத் தள்ளாதே, பொருளாதார நெருக்கடிக்கு உடனடித் தீர்வு வழங்கு, கோத்தா வீட்டுக்குச் செல்' போன்ற பல்வேறு வாசகங்களைக் கொண்ட சுலோகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறும் கோஷங்கள் எழுப்பியும் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து செங்கலடிச் சந்திக்குச் சென்று அங்கு சுமார் ஒரு மணித்தியாலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் அங்கிருந்து மீண்டும் பேரணியாக பல்கலைக்கழக வளாகத்தைச் சென்றடைந்தனர்.

(க-இ)



கண்டியில் அரசாங்கத்துக்கு எதிராக சுகாதார ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.



# 13 சுகாதார அமைப்புகள் இணைந்து அரசாங்கத்துக்கு எதிராக போராட்டம்

மன்னார், ஏப். 6

அரசாங்கத்துக்கு எதிராக பொதுமக்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்களுக்கு ஆதரவாக, 7 கோரிக்கைகளை முன்வைத்து சுகாதார சேவைகளின் 13 தொழிற்சங்கத்தினர் ஒன்றிணைந்து, மன்னார் மாவட்ட பொது மருத்துவமனை முன்பாக நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டன.

"அவசரகால சட்டத்தை ரத்துச் செய், கைது செய்தவர்களை உடனடியாக விடுதலை செய், மருத்துவப் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்" உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

(ம-க,60,213)




அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தின்போது, "ராஜபக்சக்கள் போர்க் குற்றவாளிகள். அவர்கள் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தப்படவேண்டும்" என்று எழுதப்பட்ட பதாகையை ஏந்தியவாறும் சிலர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## விலகினார் ஆட்டிகல

நிதியமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல பதவி விலகியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவர் தனது பதவி விலகல் கடிதத்தை, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் கையளித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (க-4)



# சட்டமா அதிபர் திணைக்களத்தை முற்றுகையிட்ட சட்டத்தரணிகள்

கொழும்பு,ஏப்.6

சட்டமா அதிபர் திணைக்களத்தை முற்றுகையிட்டு, சட்டத்தரணிகள் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையில், தற்போதைய ஆட்சியாளர்கள் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புதுக்கடை நீதிவான் நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டம், சட்டமா அதிபர் அலுவலகம் வரை சென்றது. இதில் சுமார் ஆயிரத்து 500 சட்டத்தரணிகள் பங்கேற்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-க-இ)




கொழும்பில் கடும் மழைக்கு மத்தியிலும் நேற்றுப் பொதுமக்களின் தன்னெழுச்சிப் போராட்டங்கள் தீவிரம் பெற்றிருந்தன. பத்தரமுல்ல பகுதியில் நாடாளுமன்ற வளாகத்தை நோக்கி பொதுமக்கள் பேரணியாகச் செல்ல ஆரம்பித்தனர். வீதிகளில் தடுப்பரண்கள் அமைத்து பொலிஸாரால் அவர்களுக்குத் தடைபோடப்பட்டது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ப்பாட்டத்தில் வன்முறை ஆதாரங்களுடன் கைதாவீர்!

## பொலிஸார் மிரட்டல்தொனி

**கொழும்பு, ஏப். 6**

**அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் வன்முறைகளில் ஈடுபட்ட நபர்கள், காணொலி ஆதாரங்களின் அடிப்படையில், எதிர்வரும் காலங்களில் கைது செய்யப்படுவர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அந்த அலுவலகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், சில ஆர்ப்பாட்டங்களில் தீ வைப்பு, அத்துமீறி நுழைதல் போன்ற வன்முறைகள் இடம்பெற்றுள்ளன. இவ்வாறான செயல்களில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் காணொலி ஆதாரங்களில் அடையாளம் காணப்பட்ட மேலும் பலர் எதிர்வரும் காலங்களில் கைது செய்யப்படுவர். அமைதியான முறையில் எவர் வேண்டுமானாலும் போராட்டத்தை நடத்தலாம். எனினும் வன்முறையில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்படுவர். எனவே கலவரம் அல்லது வன்முறைச் செயல்களில் எவரும் ஈடுபட வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-க-இ)

# அரசாங்கத்தின் தற்காலிகத் தீர்வுகளால் போராட்டம் கட்டுப்படாது

## எதிர்க்கட்சி சாடல்

**“ஊரடங்குச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டங்கள் மூலம் நாட்டை மூடுவதன் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. தற்போதைய நிதி பிரச்சினைகளுக்கு குறுகிய காலத் தீர்வுகள் வழங்கப்பட வேண்டும்.”**

கொழும்பு, ஏப். 6

தற்போதைய அரசுடன் இணைந்துள்ள 11 பங்காளிக் கட்சிகள் வழங்கும் தற்காலிக தீர்வுகள் மூலம், பொதுமக்களின் எதிர்ப்பைக் கட்டுப்படுத்த முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவிக்கையில்;

வெறும் தற்காலிகத் தீர்வுகளால் போராட்டக்காரர்கள் திருப்தியடையமாட்டார்கள்.

முழு அரசையும் வீட்டுக்கு அனுப்பி நாட்டை நிர்வகிக்கக்கூடிய தொழில்சார் வல்லுநர் ஒருவரால்தான் ஆட்சியை பொறுப்பேற்கப்பட வேண்டும். முழு அரசையும் பதவிவிலக அழைப்பு விடுக்கும் போராட்டக்காரர்கள், அரச கருவூலத்தில் இருந்து தவறாகப் பயன்படுத்தப்பட்ட அனைத்துச் சொத்துக்களையும் கைப்பற்றக் கோருகின்றனர்.

ஊரடங்குச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டங்கள் மூலம் நாட்டை மூடுவதன்மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணமுடியாது. தற்போதைய நிதிப் பிரச்சினைகளுக்கு குறுகிய காலத் தீர்வுகள் வழங்கப்படவேண்டும். இல்லை என்றால் அடுத்த சில நாள்களில் போராட்டம் மேலும் அதிகரிக்கும் -என்றார். (ம-க-இ)

# மின்சக்தி அமைச்சரை உடனடியாக மாற்றுக!

## பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு கோரிக்கை

**“மின்சாரம் மற்றும் பெற்றோலியத் தொழில்துறைகளை மீட்டெடுக்கும் நோக்குடன் அமைச்சரை மாற்ற கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.”**

கொழும்பு, ஏப்.6

மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சுக்கு பொருத்தமான, ஆற்றல்மிக்க ஒருவரை அமைச்சராக நியமிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அரசைக் கோரியுள்ளது.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையிலுள்ள மின்சாரம் மற்றும் பெற்றோலியத் தொழில்துறைகளை மீட்டெடுக்கும் நோக்குடன், இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க, தெரிவித்துள்ளார். (ம-க-இ)

# மீரிஹான சம்பவத்தில் எவரும் இறக்கவில்லை

## பொலிஸார் அறிவிப்பு

மீரிஹான சம்பவத்தில் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் உயிரிழந்தார் என்று வெளிவரும் செய்திகளில் எந்தவித உண்மையும் இல்லை என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மீரிஹான பகுதியில் அமைந்துள்ள ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் வீட்டுக்கு அருகில் கடந்த வாரம் நடைபெற்ற போராட்டத்தின்போது, பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்களுள் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார் என்று சமூக வலைத்தளங்களில் தகவல்கள் பரப்பப்பட்டுள்ளன.

இதற்குப் பதிலளித்துள்ள பொலிஸ் ஊடகப் பிரிவு, களுபோவிலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இளைஞர் ஒருவர் உயிரிழந்தார் என்று சமூக வலைத்தளங்களில் தகவல்கள் பரப்பப்படுகின்றன.

அந்தத் தகவல்கள் உண்மையில்லை என்று தெரிவித்துள்ளது. (ம-க-இ)



# அவன்கார்ட் நிறுவனத் தலைவர் நிசங்க சேனாதிபதி ‘எஸ்கேப்’

## குடும்பத்துடன் மாலைதீவுக்கு பறந்தார்

கொழும்பு, ஏப். 6

அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிசங்க சேனாதிபதி தனது குடும்பத்துடன் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து மாலைதீவுக்குச் சென்றுள்ளார்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் நேற்றுமுன்தினம் அவர் மாலைதீவு நோக்கிச் சென்றுள்ளார்.

அவர்கள் சென்றபோது கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் கணினி மற்றும் பாதுகாப்புக் கமரா அமைப்பு என்பன சீர்குலைந்திருந்தன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய பாதுகாப்புப் படையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-க-இ)

# அரசாங்கத்திலிருந்து நழுவியது இ.தொ.கா.

கொழும்பு, ஏப் .6

கட்சியின் ஏகமனதான தீர்மானத்துக்கிணங்க, அரசிலிருந்து வெளியேறுவதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

இதனை அந்தக் கட்சியின் தலைவர் செந்தில் தொண்டமான் அறிவித்துள்ளார்.

தனது முகப்புத்தகக் கணக்கில் அவர் இதனைப் பதிவிட்டுள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனது நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளது. (ம-க-இ)

# இராஜாங்க அமைச்சை உதறினார் ஜீவன்!

கொழும்பு, ஏப்.6

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், இராஜாங்க அமைச்சுப் பதவியை விட்டு விலகியுள்ளார்.

இது தொடர்பான கடிதத்தை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி அமைத்து மொட்டுச் சின்னத்தில் போட்டியிட்ட காங்கிரஸ், நுவரெலியா மாவட்டத்தில் இரு ஆசனங்களைப் பெற்றது.

சுமார் ஒன்றரை தசாப்தங்களுக்குப் பின்னர் ராஜபக்சக்கள் தலைமையிலான அரசாங்கத்துக்கு வழங்கி வந்த ஆதரவை, இ.தொ.கா. திரும்பப் பெற்றுள்ளது. (ம-க-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அநீதியைக் கண்டு மௌனிப்பதும் அதர்மமே!

இலங்கையில் கடந்த சில தினங்களாகவே நிலவிவரும் கொதிநிலை இன்னமும் ஓய்ந்தபாடில்லை. இலங்கையின் பொருளாதார நலிவுநிலை போன்று நாளுக்குநாள் இந்தக் கொதிநிலை தீவிரம்பெற்று வருகின்றதே தவிர இயல்புநிலை திரும்புவதற்கான அறிகுறிகள் இம்மியும் இல்லை.

இலங்கையில் இப்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போராட்டங்கள் தன்னெழுச்சிப் போராட்டங்கள். உண்ண உணவு, உடுக்க உடை, அடிப்படை வசதிகளுடனான ஒரு வாழ்க்கை இவற்றுக்காகத்தான் இந்தப் போராட்டங்கள் நாடளாவிய ரீதியில் பரவலாக வெடித்துள்ளன. அரசாங்கம் பகல்கனவு காண்பதைப்போல் அவ்வளவு இலகுவாக முடிவுக்கு வந்துவிடும் போராட்டங்களல்ல இவை. இந்தப் பொருளாதாரப் பின்னடைவுக்குப் பொறுப்பேற்றுப் பதவி விலகுவதைத்தான் இப்போது மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். அதுவொன்றுதான் இந்தப் போருக்கான முற்றுப் புள்ளியாகவும் அமையும்.

ஐரோப்பிய நாடுகளில் இடம்பெறும் போராட்டங்களை விடவும், அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற வளர்ந்த நாடுகளில் இடம்பெறும் போராட்டங்களை விடவும் ஆபிரிக்காவில் இடம்பெறும் போராட்டங்கள் வலியவை என்று சொல்வதுண்டு. காரணம், ஆபிரிக்காவில் இடம்பெறும் போராட்டங்கள் சலுகைகளுக்கான – உரிமைகளுக்கான – ஆடம்பரங்களுக்கான போராட்டங்களாக அல்லாமல் உணவுக்கான போராட்டங்களாக அமைந்திருக்கும். ரொட்டிக்கான விலையேற்றங்கள்தான் எத்தனையோ நாடுகளின் அரசியலையே தீர்மானித்திருக்கின்றன. இலங்கையில் இடம்பெறும் போராட்டங்களும் அத்தகையானவையே.

ஆபிரிக்காவுக்கு எவ்வாறு ரொட்டியோ அப்படித்தான் இலங்கையர்களுக்குப் பாண். ஆனால், இன்று அந்தப் பாண்கூட பணம் படைத்தவர்களின் உணவாக ஆகிவிட்டது. ஐந்து பேர்கொண்ட குடும்பமொன்றால் நாட்டில் வாழமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. ''பட்டினிச்சாவை எதிர்கொள்வதை விடவும் போராடி இறந்துபோவது மேல்'' என்ற சித்தாந்தம்தான் இந்தப் போராட்டங்களுக்கான விதை – அத்திபாரம் – ஆதாரம் எல்லாமும்.

இப்படியொரு நிலையில் அமைச்சர்களை மாற்றுவதையோ அல்லது பெரமுனவினர் தனித்து இருந்து கபட நாடகம் ஆடுவதையோ மக்கள் விரும்பவும் இல்லை – எதிர்பார்க்கவும் இல்லை. மக்கள் புத்தம்புதிய பக்கமொன்றைக் கோருகின்றனர். முழுவதுமான மாற்றத்தை எதிர்பார்க்கின்றனர். மாறாக திருத்தி எழுதப்பட்ட பக்கத்தையோ – பகுதியளவில் செய்யப்பட்ட மாற்றத்தையோ அல்ல.

பெரமுனவில் இருந்து நேற்றுப் பிரிந்து தனித்து இயங்க முடிவுசெய்தவர்கள் ஆத்மார்த்தமானவர்கள் என்றால், அவர்கள் மக்களின் அவலத்தை – பேரிடரைப் புரிந்துகொண்டுள்ளனர் என்றால் எதிர்க்கட்சிகளுடன் இணைந்து இந்த அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் ஜனநாயக வழியில் முறையாக – முழுவதுமாக அகற்றுவதற்கு முன்வரவேண்டும். அதைவிடுத்து, தனித்து இருக்கின்றோம் என்ற பெயரில் இங்குமில்லாமல் அங்குமில்லாமல் கபடமாடுவது மக்களுக்கு வெந்த புண்ணில் வேல்பாய்ச்சும் செயலாகத்தான் இருக்கும். ஏனெனில் அநீதிக்கு எதிராகக் காக்கப்படும் மௌனம் கூட அதர்மமே.

மக்களின் போராட்டத்தைத் தற்போது ஒரு குடையின் கீழ் ஒருங்கிணைக்கும் தலையாய கடமை தமக்கு உண்டு என்பதை எதிர்க்கட்சிகளும் உணர்ந்துகொள்ள வேண்டும். அங்கொன்றும் இங்கொன்றுமாக தமக்குள் சிதறிக்கிடக்காது முதலில் தமக்குள் ஓர் ஒற்றுமையைக் கட்டியெழுப்பி அரசாங்கத்தை மக்களின் பேராதரவுடன் ஜனநாயக வழியில் வீட்டுக்கு அனுப்ப உறுதிபூண வேண்டும். ஏனெனில், வரலாறு, வாய்ப்பைத் திரும்பத் திரும்ப வழங்கிக் கொண்டிருக்காது. வரலாற்றில் உள்ள பிரமிப்பே அதுதான். (இ-க-ப)

நாளொரு நல்வார்த்தை

"கோபம் அன்பை அழிக்கிறது. செருக்கு அடக்கத்தை அழிக்கிறது" - சாணக்கியன்




### ஆர்ப்பாட்டங்களின் நடுவே

# மணல் கொள்ளை மன்னாரில் தீவிரம்

மன்னார், ஏப். 6

**நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுவரும் நிலையில், மன்னார் மாவட்டத்தில் மணல் கொள்ளை தாராளமாக இடம்பெறுகின்றது என்று மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**



இது தொடர்பில் மக்கள் மேலும் தெரிவித்ததாவது:- நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுவரும் நிலையில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்த, கண்காணிக்க கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இராணுவம் மற்றும் பொலிஸாரின் இந்தக் கண்காணிப்பு நடவடிக்கைகள் சமூக விரோதச் செயல்களைக் கட்டுப்படுத்துவதில் குறைந்துள்ளது. இதனால், மாந்தை மேற்குப் பிரதேசத்தில் உள்ள இலுப்பைக்கடவை கூறாய் ஆறு மற்றும் நானாட்டான் பிரதேச அருவி ஆற்றுப் பகுதியில் மணல் கொள்ளை தாராளமாக இடம்பெறுகின்றது. மின்வெட்டை சாதகமாகப் பயன்படுத்தி கனரக வாகனங்களின் ஊடாக மணல் கொள்ளை நடைபெறுகின்றது. கடற்றொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் எரிபொருள் தட்டுப்பாட்டால் சிரமங்களை எதிர்கொண்டுள்ளபோதும். மணல் வியாபாரிகளுக்கு மட்டும் எரிபொருள்கள் தட்டுப்பாடின்றி எவ்வாறு கிடைக்கின்றது? என்று அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். (ம-க,213)

# அத்தியாவசிய மருந்துகளுக்காக உலக வங்கியிடம் உதவிகோரல்

கொழும்பு, ஏப். 6

அத்தியாவசிய மருந்துப் பொருள்கள் கொள்முதல் செய்வதற்கு உடனடி உதவியாக 40 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்குமாறு அரசாங்கத்தால், உலக வங்கியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கையிருப்பிலுள்ள அத்தியாவசிய மருந்துப் பொருள்கள் நிறைவடையும் நிலையிலுள்ளது. தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மருந்து இறக்குமதியாளர்கள் வங்கிகளில் நாணயப் பத்திரங்களைத் திறக்க முடியாமை காரணமாக அவதியுறுகின்றனர். இந்த நிலையிலேயே அத்தியாவசிய மருந்துப் பொருள்களைக் கொள்முதல்செய்வதற்கு உடனடி உதவியாக 40 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்குமாறு அரசாங்கத்தால், உலக வங்கியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-க,ரி1)

நாளை 07.04.2022 வியாழக்கிழமை பங்குனி 24

சுபநேரம் : 07.38 - 09.08
ராகுகாலம்: 01.38 - 03.08

ஷஷ்டி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் முகாமைத்துவம் மன்னாரில் கலந்துரையாடல்

மன்னார், ஏப். 6

**மன்னாரில் சகல துறையினருக்கும் தடையின்றி எரிபொருள் கிடைக்கும் வகையில் எரிபொருளை முகாமை செய்வதற்கான கலந்துரையாடல், மன்னார் மாவட்டச் செயலர் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.**



மன்னார் மாவட்டச் செயலகத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போது அரச, தனியார் போக்குவரத்துச் சங்கம், மீனவர் அமைப்புக்கள், வெதுப்பக உரிமையாளர்கள், எரிபொருள் நிரப்பும் நிலைய முகாமையாளர்கள், மன்னார் மின்சார சபை அத்தியட்சகர், மன்னார் மருத்துவத் தரப்பு, பிரதேச செயலர்கள் மற்றும் அழைக்கப்பட்ட திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாவட்டத்தில் உள்ள மீனவர்களுக்கு கடற்றொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள மீன்பிடிப் படகு மற்றும் ரோலர் படகுகளுக்குத் தேவையான மண்ணெண்ணெய் மற்றும் டீசலை உரிய முறையில் பகிர்ந்தளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கு அமைவாக மாவட்டத்தில் உள்ள மீனவர் அமைப்புக்கள் ஊடாக தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களின் ஊடாக மீன்பிடி நடவடிக்கைகளுக்காக தேவையான எரிபொருளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும் மாவட்டத்தில் உள்ள வெதுப்பகங்களுக்கும் உரிய முறையில் எரிபொருளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (ம-56)

## ரட்ணா முன்பள்ளி விளையாட்டு விழா

சாவகச்சேரி, ஏப். 6

வரணி ரட்ணா முன்பள்ளி மழலைகளின் 2022ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழா நாளை பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முகாமைத்துவ குழுத் தலைவர் துதிமோகன் தர்சினி தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சறோஜா தேவி அரியநாயகம், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கொத்தணிபொது முகாமையாளர் க.அருட்செல்வம், சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் சி.பிரபாகரன் உட்பட பலர் கலந்துகொள்வர். (ம-14,159)

## தாவடியில் சாராய விற்பனை; ஒருவர் கைது!

கொக்குவில் தாவடிப் பகுதியில் அரச அனுமதிப்பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்ய முயன்றார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரை கடந்த ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மேற்கொண்ட சோதனையில் அதேபகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-125)

## விளையாட்டு கழகங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்

சாவகச்சேரி, ஏப். 6

தென்மராட்சிப் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான இந்த வருட விளையாட்டுப் போட்டிகள் ஏப்ரல் மாத நடுப்பகுதியில் நடத்தப்படவுள்ளன.

இதற்கமைய போட்டிகளில் பங்குபற்றவுள்ள கழகங்களின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (ம-14,9)

# கசிப்புக் காய்ச்சினாரென சுழிபுரத்தில் ஒருவர் கைது



யாழ்ப்பாணம், ஏப். 6

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் பாண்டவெட்டை பகுதியில் வீட்டில் வைத்து கசிப்புக் காய்ச்சினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

குறித்த பகுதியிலுள்ள வீட்டில் கசிப்பு காய்ச்சப்படுகிறது என வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மேற்கொண்ட சோதனையில் அதேபகுதியைச் சேர்ந்த ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

அத்துடன் அவரிடமிருந்து 4 ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பும் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)

*எரிபொருள் தீர்ந்ததால்*

# நடுக்கடலில் தத்தளித்த மீனவர்கள் திருமலையில் பத்திரமாக மீட்பு

முல்லைத்தீவு, ஏப். 6

முல்லைத்தீவு - புதுமாத்தளன் கடற்கரையில் இருந்து கடந்தமாதம் 30ஆம் திகதி கடற்றொழிலுக்குச் சென்ற இரண்டு மீனவர்கள் படகில் எரிபொருள் தீர்ந்தமையால் நடுக்கடலில் தத்தளித்த நிலையில் திருகோணமலை ஆழ்கடல் மீனவர் படகால் மீட்கப்பட்டனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

குறித்த மீனவர்கள் 30 லீற்றர் எண்ணெயுடன் மீன்பிடிப்பதற்காகச் சென்றுள்ளனர். கடந்த 31ஆம் திகதி கரைதிரும்பவேண்டிய மீனவர்கள் கரை திரும்பாததால் அவர்களைக் காணவில்லை என்று கடற்றொழில் திணைக்களம், சர்வதேச கடற்பரப்பில் ஈடுபடும் ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் மற்றும் ஏனைய மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு தகவல் வழங்கப்பட்டது. இதனையடுத்து கடந்த முதலாம் திகதி திருகோணமலை ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்களால் குறித்த மீனவர்கள் இருவரும் மீட்கப்பட்டனர் - என்றனர். (ம-14,19)

## சடலங்களை பொறுப்பேற்க கோரிக்கை

உரிமை கோரப்படாத நிலையில் பெயர், இடம் தெரியாத ஆண் நோயாளிகள் மூவரின் சடலங்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உள்ள நிலையில், அவற்றைப் பொறுப்பேற்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பொலிஸாரால் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 9ஆம் திகதியும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியும் இந்த ஆண்டு மார்ச் மாதம் 16ஆம் திகதியும் ஆண் நோயாளர்களின் மூன்று சடலங்கள் யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. குறித்த சடலங்கள் இன்னமும் எவராலும் அடையாளம் காணப்படாத நிலையிலேயே அவற்றை அடையாளம் காண முன்வருமாறு யாழ். போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ம-14)

# வீட்டில் கசிப்பு காய்ச்சல்; காரைநகரில் ஒருவர் கைது



காரைநகர், ஏப்.6

காரைநகர் - களபூமி பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவர் வீட்டில் வைத்து கசிப்பு காய்ச்சலில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டார்.

ஊர்காவற்றுறை பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட சோதனையில் அவரிடமிருந்து 350 மில்லிலீற்றர் கசிப்பு மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபரை ஊர்காவற்றுறை நீதிமன்றில் இன்று முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (ச-27)

# சட்டவிரோத மாடு இறைச்சியாக்கல்: கொழும்புத்துறையில் ஒருவர் கைது



யாழ்ப்பாணம், ஏப். 6

கொழும்புத்துறை ஏ.வி. வீதியில் சட்டவிரோதமாக மாடொன்றை இறைச்சியாக்கினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

சட்ட விரோதமாக மாடொன்று இறைச்சியாக்கப்படுகிறது எனப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து குறித்த இடத்தைச் சுற்றிவளைத்த யாழ். பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் அங்கு 42 வயதான ஒருவரைக் கைதுசெய்துள்ளனர். அத்துடன் 50 கிலோ இறைச்சியும் கைப்பற்றப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nanban Kapil is feeling loved with Pirakash Jĕ and 26 others
43 m

சிங்கள மக்களின் பரிதாபம் யாதெனில்
**‘உங்கள் தலைவன் யார்?’** என்ற
கேள்விக்கு தலையைக் குனிந்து கொள்வதுதான்!

ஆனால் அதேகேள்விக்கு எங்களின் தலைகள்
நிமிர்ந்து உரக்கச் சொல்லும் தமிழினத்தின்
தலைவன் யாரென்று...





ஜோன்ஸ்டனுக்கு பெருந்தெரு

மக்களுக்கு உண்ன உணவில்லை

நாறப்பய பெருந்தெருவில
என்னத்தை பிடுங்க போறான்

#New மொந்தையில் பழைய #கள்ளு




வரலாறு அழித்து எழுதப்பட்டது இன்னும்
அசிங்கமாக. எத்தனை தடைவைகள் நீங்கள்
வரலாற்றை வலிந்து மாற்ற எத்தனித்தாலும்
அத்தனை தடவைகளும் இன்னுமின்னும்
அசிங்கமாகத்தான் அது எழுதப்படும்.

காரணம் தமிழர்கள் இரு விடயங்களை
நம்புகின்றனர்.

1.இறை 2.வினை




Hanees Mohamed
8 h

ஓடு சிதைந்த தேசம்.

ஒரு சிறு நிலமிருந்தது
அதை சுற்றி கடலிருந்தது
அதில் காடும் மலைகளும்
அப்போது மனிதர்கள் வாழ்ந்தார்கள்.
பின்னர்
நாடானது
கூடவே மதமானது

மதமிருந்தது

மதம் மட்டுமே இருந்தது.






நீதியே இல்லாத நாட்டுக்கு நீதி
அமைச்சர்
நிதி இல்லாத நாட்டுக்கு நிதி
அமைச்சர்
-அலி சப்ரி, என்ன பாவம் செய்திச்
சோ இந்த மனுசன்





Siva Ramasamy

**‘அப்போ சுகாதாரம், எரிபொருள் அத்தியாவசிய துறைகள் இல்லையா ? அதற்கு அமைச்சர்கள் இல்லையா கோபால்?”**




**இல்லாத நிதிக்கு எதற்கு அமைச்சர்**
**- அலி சப்ரி ஆர்மி**

Babugi Muthulingam
Just now

தற்போது இலங்கையில் ஆர்ப்பாட்டம்
இல்லாத ஒரே இடம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
25 . 12 . 1973



மறைவு
05 . 04 . 2022

## பாலநிதி திலகரத்தினம்

நுணாவில் சந்தி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலநிதி திலகரத்தினம் நேற்று (05.04.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சண்முகநாதன் இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகளும், விஜயரத்தினம், பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், திலகரத்தினத்தின் பாசமிகு மனைவியும் (உரிமையாளர், திருமுகம் அரிசி ஆலை), திலக்ஷன் (பிரான்ஸ்), அமரர் கஜனி, சஞ்சீவன், திசான் ஆகியோரின் பாசமிகு தாயாரும், நவநீதன், தவநேசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜயச்சந்திரன், விஜயகுமார், முகுந்தன், மேகலா, செல்வகுமார், யாழினி, சிவமாலினி, தமிழினி ஆகியோரின் மைத்துனியும், திலக்சனா, தேனிலவன், லவன், றஜீவன், அக்ஷியா ஆகியோரின் பெரியதாயாரும், மதிவாணன், அபிசன், தர்மிலன், சபிதன், அபிஷேக், பிரவின், துவாரகன் (பின்லாந்து) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2022) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 8.00 மணியளவில் ஆரம்பமாகி பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் நுணாவில் மேற்கு, குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

எல்லை ஒழுங்கை,
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்
077 110 6485

(CR 8225) 1/6

# மரண அறிவித்தல்



## திருமதி தனலட்சுமி கிருபநாதன்

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 6ஆம் வட்டாரத்தை வாழ்விடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலட்சுமி கிருபநாதன் அவர்கள் கடந்த (03.04.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணேசு, அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பரராசசிங்கம் மற்றும் திருமேனிப்பிள்ளை (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான யோகம்மா ராசலிங்கம் மற்றும் கனகலிங்கம், மகாலட்சுமி சிவகுருநாதன் (கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கலையரசி, ஜெயகுமார் (பிரான்ஸ்), மதியரசி யோகராசா (பிரான்ஸ்), சுதாமதி விஜயகுமார் (பிரான்ஸ்), நகுலேஸ்வரன் ரமணி (சுவிஸ்), திருசத்தியா மகேந்திரன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஓட்டுமடம் இன்பம் மலர்ச்சாலையில் நாளை (07.04.2022) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று முற்பகல் 10.30 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :
ப. கிருபநாதன் (கணவர்)

(CS 43979) (3/6)

# மரண அறிவித்தல்



## நீக்கிலாப்பிள்ளை அன்ரனி

**(சமாதான நீதவான், முன்னாள் புனித வளன் கத்தோலிக்க அச்சக மேற்பார்வையாளர்)**

பிறப்பு
11 . 12 . 1946

இறப்பு
05 . 04 . 2022

மண்டைதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 39/2 கதீற்றல் வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நீக்கிலாப்பிள்ளை அன்ரனி அவர்கள் நேற்று (05.04.2022) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி நீக்கிலாப்பிள்ளை மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி செபஸ்ரி வரவணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், றெஜீனாவின் அன்புக் கணவரும், டயானா (ஆசிரியர் மண்டைதீவு றோமன் கத்தோலிக்க பாடசாலை), ஆன்சோபனா (டெனா-முன்னாள் ஆசிரியர் - யா/ திருக்குடும்பக்கன்னியர் மடம் தேசிய பாடசாலை) (லண்டன்), தீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மரியதாஸ், அற்றன்ஸ், சூசைதாஸ் காலஞ்சென்றவர்களான மேரி கிறேஸ், கிறேஸ் பத்திமா, சகாயதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அன்ரன்-ஜெயராஜ் (ஆசிரியர்-யாழ் நல்லூர் சென்.பெனடிற் றோ.க. வித்தியாலயம்), எட்வின் சந்திரராஜா (லண்டன்), றஞ்சிதா ஆகியோரின் அன்பு மாமாவும், அக்ஷயன், கஷோன், அரோன், திசான் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான அந்தோனிமுத்து தேவராஜா (அதிபர்), பெர்னபேத்தம்மா, செலஸ்ரீன்பிள்ளை, பேணாட், மற்றும் சிப்பிரியான் (சுவீடன்), லில்லி மாக்றற், றீற்றம்மா, எட்மன்ஜெயசீலன், காலஞ்சென்ற யோசப் ஜெயபாலன் மற்றும் பத்மராணி, தேவா, சாந்தினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 39/2 கதீற்றல் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்திலிருந்து நாளை (07.04.2022) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் எடுத்துச்செல்லப்பட்டு மண்டைதீவிலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 3.00 மணிக்கு மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(CS 19211) (4/6)

077 753 2593, 077 195 9206 தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அவசரமான முடிவுகளை எடுத்து வரலாற்றை மாற்றிவிடாதீர்கள்

## நாடாளுமன்றில் நாமல் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 6

அரசியல்வாதிகளின் அவசர முடிவுகளால் இலங்கையின் வரலாறே மாறியுள்ளது. எனவே தொலைநோக்குப் பார்வையுடன் ஒன்றிணைந்து கூட்டு முடிவுகளை எடுப்பதே தற்போதைய தீர்வு என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய அவர், மேலும் தெரிவிக்கையில்;

நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிறுவவேண்டிய அவசியம் இருப்பதால், அது நிறைவேறினால், ஜனாதிபதி பதவி விலக வேண்டிய அவசியமில்லை. நாடாளுமன்றத்தில் 113 ஆசனங்களைப் பெறுவதன்மூலம் எந்தவொரு கட்சியும் பெரும்பான்மை பலத்தைப் பெறமுடியும் என்று ஜனாதிபதி மற்றும் பிரதமர் இருவரும் தெளிவாகக் கூறியுள்ளனர்.

எனவே சிறுவர்களுக்கு ஆபத்து ஏற்படும் வகையில், பொதுச் சொத்துக்களை அழிக்கும் வகையில், மக்கள் வீதியில் இறங்கி போராட்டங்களில் ஈடுபட வேண்டிய அவசியமில்லை. ஏற்கனவே எழுச்சியடைந்துள்ள மக்கள் தொடர்பில் விரைந்து முடிவெடுப்பது நாட்டை வீழ்ச்சியடையச் செய்யும் என்பதால், இந்த நேரத்தில் கட்சிகள் கருத்து வேறுபாடுகளை ஒதுக்கி வைத்து மக்களை அமைதிப்படுத்த ஒன்றிணைய வேண்டும் -என்றார். (சு-இ)


**தேவை**

ஆண், பெண் கூலியாட்கள் தேவை. (CS 19210) (4/6)

தொடர்புக்கு:- 077 772 2215



**வேலையாட்கள் தேவை**

மல்லாகத்திலுள்ள ISCHI TECH (Computer shop) நிறுவனத்தில் வேலை (Managing) செய்யக்கூடிய ஆண், பெண் வேலையாள் ஒருவர் தேவை சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

**வயது எல்லை (23- 40)**

**முன்னுரிமை**

1- O/L படித்திருத்தல் (ஆகக் குறைந்தது).
2- கணினி அறிவு, CCTV கமரா பொருத்துதல்.

Whatsapp:- 0041 788 661 064

**தொடர்பில் :** 076 737 9898, 077 697 0865



**கண்ணீர் அஞ்சலி**



எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்

**திருமதி கமலதாசன் சுமித்திரா**

அவர்களின் அன்புத் தாயார்

**கந்தசாமி கமலர்தேவி**

அவர்கள் கடந்த (04-04-2022) காலமாகிவிட்டார். அன்னாரின் இழப்பினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்,**
**பிரதேச செயலகம், வேலணை.**



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**யா/ கைதடி குருசாமி வித்தியாலயம்**



**ஸ்ரீ.அனுஷ்கா**
**178 புள்ளிகள்**



**த.அபிஷா**
**173 புள்ளிகள்**



**சி.கபிஷிகா**
**165 புள்ளிகள்**

எமது பாடசாலையில் **2021 ஆம் ஆண்டு** தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய 16 மாணவர்களில் 3 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்றுள்ளதோடு 7 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேலும் 5 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேலும் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். இம்மாணவர்களையும் இவர்களை வழிப்படுத்திய

**அதிபர் திரு. ந. ஜெயரூபன் மற்றும்**
**வகுப்பாசிரியர் திருமதி விஜேந்தினி சதீஸ்வரன்**

அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**பாடசாலைச் சமூகம்**

(CR 37790) (3/6)


# நாடாளுமன்றில் பஸில் மௌனம்

கொழும்பு, ஏப். 6

**சுமார் நான்கு மாதங்களின் பின்னர் நேற்று நாடாளுமன்றுக்கு வருகை தந்த முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச அமைதியாக அமர்ந்திருந்தார்.**

பஸில் நிதியமைச்சராக இருந்தபோது நாடாளுமன்றுக்கு வராமையால் அவரை மக்கள் கடுமையாக விமர்சித்திருந்தனர்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியை அடுத்து, பல அமைச்சர்கள் பதவியை விலகியதை தொடர்ந்து, கடந்த ஞாயிற்றுக்கிழமை பஸிலும் நிதியமைச்சர் பதவியிலிருந்து விலகினார். அவர் நாட்டைவிட்டு வெளியேறி மீண்டும் அமெரிக்கா சென்றுள்ளார் என்றும் செய்திகள் பரவின.

எனினும் அவர் நேற்று நாடாளுமன்றில் பிரசன்னமாகி அமைதியாக அமர்ந்திருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (சு-இ)

## மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஏப். 6

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ, தென், மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் சில இடங்களில் 100 மி.மீ அளவான பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன்கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ம-4-இ)



## வல்லை - அச்சுவேலியில் கார்கள் மோதி விபத்து

யாழ்ப்பாணம், ஏப். 6

வல்லை - அச்சுவேலி சந்தியில் இரு கார்கள் மோதி விபத்துக்குள்ளாகின. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வல்லை வீதியில் காரில் சென்ற நபர், தொலைபேசி அழைப்புக்காக காரை வீதியோரத்தில் நிறுத்தியபோது பின்னால் வந்த கார் நிறுத்தி வைக்கப்பட்ட காரை மோதியிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-14-27)



'விபசி' பௌத்த மையத்தைச் சேர்ந்த ராஜவெல சுபதி தேரோவின் ஏற்பாட்டில், புலம்பெயர் நாடுகளிலிருந்து சேகரிக்கப்பட்ட புதிய மற்றும் நல்ல நிலையிலுள்ள மருத்துவ உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பாவனைப் பொருள்கள் ஆகியவை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அண்மையில் வழங்கப்பட்டன. (ஒ)


**வடபிராந்திய பாரவூர்த்தி (லொறி) உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ.து)**

**பகிரங்க ஏல விற்பனை தொடர்பானது**

இடம் : திருமுறிகண்டி எரிபொருள் நிலையம் (பெற்றோல் செட்)
காலம் : 15.04.2022 வெள்ளிக்கிழமை
நேரம் : மதியம் 1.00 மணி

எமது சங்கத்திற்கு சொந்தமான லொறி, கன்ரேயினர் பெட்டி 02, பவுசர், ஜெக் உட்பட பழைய இரும்பு பொருட்கள் பகிரங்க ஏல விற்பனை செய்யவுள்ளோம். எனவே இப்பொருட்களை ஏலத்தில் எடுக்க விரும்புகின்றவர்கள் பொருட்களை பார்வையிட்டுக் கொள்வதுடன் மீள் செலுத்தும் வைப்பாக 500.00 வும் மீள செலுத்தாத வைப்பாக 1000.00 ரூபாவினையும் செலுத்தி ஏல விற்பனையில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தலைவர்**
**வடபிராந்திய பாரவூர்தி (லொறி) உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ.து)**

(CR 37797) (3/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபூமி
முதியோர் இல்லம்
வழக்கம்பராய், தொல்புரம், சுழிபுரம்

## 15 ஆவது ஆண்டு நிறைவு விழா

காலம் : 07.04.2022 (வியாழக்கிழமை மாலை 3.00 மணி)

இடம் : சிவபூமி முதியோர் இல்லம் (பாலச்சந்திரன் அரங்கு)

இறைவனருளாலும், பெரியோர்களின் ஆசியாலும், எமது சிவபூமி முதியோர் இல்லம் பதினைந்து ஆண்டுகளாக எம் மண்ணில் ஆதரவற்ற மூத்தோர்க்கு ஆறுதல் வழங்கும் நிலையமாக செயற்பட்டு வருகின்றது. கடந்த (07.04.2007) அன்று ஆரம்பிக்கப்பட்ட எமது இல்லத்தின் வளர்ச்சியில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஆதரவு வழங்கிய பல அன்பு உள்ளங்களை நீள நினைந்து நன்றி கூறுகின்றோம். எமது இல்லத்தில் வாழ்ந்து இதுவரை இறைவனடியில் ஆறுதல் பெற்ற மூத்தோரின் நல்லாசிகளும் எங்கள் பணி தொடர வழி வகுக்கின்றது. தொடர்ந்தும் எங்கள் இல்லம் தன்பணி தொடர தங்கள் அன்பும் ஆதரவும் வேண்டி அமைகின்றோம்.

**பிரதம விருந்தினர் :**

**பேராசிரியர் செ. கண்ணதாசன் தம்பதிகள்**
பீடாதிபதி - உயர் பட்டப்படிப்புக்கள் பீடம், யாழ். பல்கலைக்கழகம்

**சிறப்பு விருந்தினர் :**

**திருமதி இராஜாம்பாள் பாலச்சந்திரன் அவர்கள்**
புளோறிடா, அமெரிக்கா

**கௌரவ விருந்தினர் :**

**திருமதி பிரேமினி பொன்னம்பலம்**
பிரதேச செயலாளர் - வலி மேற்கு பிரதேச செயலகம், சங்கானை

**புதிய கட்டடத்தொகுதி திறப்பு விழா**
**வல்வெட்டி அமரர் விசாலாட்சி குமாரசாமி நினைவாக**
**அமரரின் பிள்ளைகள் அன்பளிப்பு**

**நிகழ்ச்சி நிரல்**

- சிவபூமி ஞானவைரவர் ஆலய வழிபாடு
- புதிய கட்டடம் திறத்தல்
- மங்கல விளக்கேற்றல்
- திருமுறை பாராயணம்
- ஆசியுரை
  - **சிவஸ்ரீ ரங்கநாத குருக்கள்** (வழக்கம்பராய் முத்துமாரி அம்மன் ஆலயம்)
  - **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்** (முதல்வர் - நல்லை அதீனம்)
  - **ஆன்மீக சுடர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள்** (சுப்ரமுனிய கோட்டம் - கோப்பாய்)
- வரவேற்புரை
- தலைமையுரை - **கலாநிதி ஆறு. திருமுருகன்**
- கலை நிகழ்வுகள்
  நடனம் - கோண்டாவில் சிவபூமி மனவிருத்தி பாடசாலை மாணவர்கள்
  நாடகம் - சண் நாடகக் குழுவினர் வழங்கும் "தலையெழுத்து" "அங்கிருதத்தி"
- பணியாளர் கௌரவிப்பு
- நன்றியுரை.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**
**நிர்வாகசபை,**
**சிவபூமி முதியோர் இல்லம்**
021 321 4230, 021 225 0085
(CS 43068) 93/6)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
08 • 09 • 1936



மறைவு
07 • 03 • 2022


## அமரர் பூதப்பிள்ளை கந்தையா

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வாழ்க்கையினை வென்று வானுறையும் தெய்வத்துடன் கலந்திட்ட எங்கள் குடும்பத்தலைவர் திரு. பூதப்பிள்ளை கந்தையா அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து எமக்கு ஆறுதலும் ஒத்துழைப்புக்களும் வழங்கிய உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்களுக்கும் அவரது பூதவுடலுக்கு அஞ்சலியினை செலுத்திய யா/ சாவகச்சேரி மகளீர் கல்லூரி, யா/ கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ் கலவன் பாடசாலை, யா/ சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யா/ நாவற்குழி மத்திய மகா வித்தியாலயம், யா/ மட்டுவில் வடக்கு அ.த.க பாடசாலை, யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, யா/ இராமநாதன் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்களுக்கும் ஏனைய பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும், கோப்பாய் கோட்ட அதிபர்களுக்கும், வடமாகாண ஹட்டன் நஷனல் வங்கியின் முகாமையாளர்கள், உத்தியோகத்தர்களுக்கும், வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை உத்தியோகத்தர்களுக்கும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் வைத்தியர்களுக்கும், தென்மராட்சி கல்வி வலய உத்தியோகத்தர்களுக்கும், வவுனியா விவசாய கல்லூரி விரிவுரையாளர்கள் உத்தியோகத்தர்களுக்கும் வவுனியா பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்களுக்கும் சுன்னாகம் வாழ்வக நிறுவன நிர்வாகத்தினருக்கும் மட்டுவில் மோனகதாஸ் சனசமூக நிலைய நிர்வாகத்தினருக்கும் ஆழ் மனதில் இருந்து நெஞ்சம் நிறைந்த நன்றிகளை தெரிவித்து நிற்கின்றோம். மேலும் தொலைபேசியூடாகவும், சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் அனுதாபம் தெரிவித்த உள்நாடு, வெளிநாடுகளில் உள்ள அன்புள்ளம் கொண்டயாவருக்கும் மாலைகள், மலர் வளையங்களை சாத்தி அஞ்சலி செலுத்தியயாவருக்கும் அன்னாரின் இறுதிக்கிரியைகளிலும் இறுதி ஊர்வலத்திலும் பங்குபற்றி பல வழிகளிலும் தோளோடு தோள் கொடுத்து நின்ற அன்புள்ளங்கள் யாவருக்கும் எமது உள்ளத்தில் இருந்து எழும் உணர்வுகளை நெஞ்சம் நெகிழ நன்றிப் பூக்களாக சொரிகின்றோம்.

**மட்டுவில் வடக்கு அ.த.க பாடசாலை வீதி**
**மட்டுவில், சாவகச்சேரி.**
(CS 43995) (3/6)

**குடும்பத்தினர்**
**077 411 8960**

# மரண அறிவித்தல்



## திரு. காசிப்பிள்ளை மார்க்கண்டு

பிறப்பு
05.08.1953

இறப்பு
02.04.2022

யாழ். புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் ஜேர்மனி Homburg (saar) ஐ வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை மார்க்கண்டு அவர்கள் கடந்த (02.04.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், பொன்னையா நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தை சேர்ந்த இராஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், Dip.Eng அனுசியா, அனுசியன், Dr.Med சுகிந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், யோகம்மா மற்றும் திருநீலகண்டன் (யாழ்ப்பாணம்), இராசலிங்கம் (யாழ்ப்பாணம்), காலஞ்சென்றவர்களான கந்தசாமி (தபால் ஊழியர்) கனகரத்தினம் (ஆனந்தன்) ஆகியோரின் அன்பு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.04.2022) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மனைவி : இராஜேஸ்வரி
**+49684178037**

(CS 43982) (3/6)

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவ. பஸ் நிலையம் மக்கள் பாவனைக்கு

சாவகச்சேரி, ஏப். 6

100 நகரங்களை அழகுபடுத்தும் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், நகர அபிவிருத்தி அதிகார சபையின் 20 மில்லியன் ரூபா நிதியில் புனரமைக்கப்பட்ட சாவகச்சேரி நகர சபையின் சாவகச்சேரி பேருந்து நிலையக் கட்டம், சாவகச்சேரி பிரதேசசபை யின் கொடிகாமம் நடைபாதை ஆகியவை பொதுமக்களின் பாவனைக்காக அண்மையில் திறக்கப்பட்டன.

உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள் தலை மையில் இடம்பெற்ற நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் திசா நாயக்கா, தென்மராட்சிப் பிரதேச செயலர், அதிகார சபையின் யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

(ம-14,9)


## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி - 55 ரூபாய்

இழுத்து பதிக்க - 75 ரூபாய்

077 334 1281

(NE 18236) (3/6)


## 2022 தேருநர் (வாக்காளர்) இடாப்பு கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது

2022 ஆம் ஆண்டிற்கான வாக்காளர்கள் கணக்கெடுப்பு 2022.02.01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனைத்து வீடுகளுக்கும் கணக்கெடுப்புப் படிவங்கள் விநியோகிக்கப்பட மாட்டாது.

2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்படாதிருப்பின் அல்லது 2021 ஆம் ஆண்டில் பதிவு தொடர்பான முகவரியில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமாயின் ; 2004.01.31 அல்லது அதற்கு முன்னர் பிறந்த நபர்களை பதிவு செய்துகொள்வதற்காக

மற்றும்

**18 வயது பூர்த்தியடைந்தவுடனேயே 04 மாதங்களுக்கொரு முறை குறைநிரப்பு இடாப்பு ஊடாக வாக்குரிமையை**

பெற்றுக்கொள்வதற்காக 16 - 18 வயதுகளுக்கிடைப்பட்ட (2006.01.31 இற்கு முன்னர் பிறந்த) பிரஜைகளைப் பதிவு செய்து கொள்வதற்காக கிராம அலுவலரை அல்லது மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தேர்தல் ஆணைக்குழு**

011-2868441 /

www.elections.gov.lk

## கேள்வி அறிவித்தல்
## வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி.
## மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை அபிவிருத்தி வேலைத்திட்டம் - 2022

01. தலைவர், பெறுகைக்குழு, வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி தகுதி வாய்ந்த வழங்குநர்களிட மிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலை களுக்காக கோருகின்றார்.

02. நிதி அமைச்சின் பொது நிதி திணைக்கள சுற்றுநிருபம் 04/2016(III) படி தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாக பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது.

03. கேள்வி பெறத்தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அத்துடன் அட்டவணையில் குறிப்பிட்டதற்கு இணங்க பொருத்தமான தரத்தில் சிடா (ICTAD/CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி (தொலைபேசி: 024-2053014, மின்னஞ்சல் - vnpsnk@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 2022.04.06 ஆம் திகதியிலிருந்து மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணிவரை கேள்வி ஆவணத்தினை பார்வையிடலாம்.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணமொன்றை எழுத்து மூலமான கோரிக்கையினை சமர்ப்பித்து தலைவர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி எனும் அலுவலகத்திலிருந்து 2022.04.06 ஆம் திகதியிலிருந்து 2022.04.27 வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/ (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி எனும் முகவரிக்கு 2022.04.27 ஆம் திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படவேண்டும். அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியினுள் இடப்படவேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர்களின் அல்லது எழுத்து மூலமாக அனுமதிக்கப்பட்ட கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

07. கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியளவில் மாற்றம் செய்யவோ அல்லது நிராகரிப்பதற்கோ கேள்விச்சபைக்கு முழுமையான அதிகாரம் உண்டு.

08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து 63நாட்கள் (அறுபத்து மூன்று நாட்கள்) 2022.06.29 ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும்.

09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்விஎண் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| PSDG/VU/VNPS/W/01/2022 | Construction of Metaling & Tarring work at Thuvaranery Anantharpuliyankulam Road (Stage II)(0.265km) | 5.68 | 3 மாதம் | C6 & C7 | 57,000.00 | 2022.07.27 |
| PSDG/VU/VNPS/W/02/2022 | Construction of water supply scheme at Kollarpuliyankulam (RO Plant) | 3.94 | 3 மாதம் | C7 & C8 | 40,000.00 | 2022.07.27 |

10. கேள்விகோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 2022.04.18 ம் திகதி 10..30 மணிக்கு வவுனியா வடக்கு பிரதேச சபை தலைமையலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர் தமது செலவில் கலந்து கொள்ளமுடியும்

**பெறுகைக்குழு,**
**வவுனியா வடக்கு பிரதேச சபை,**
**நெடுங்கேணி,**

**2022.04.05** (CR 37795) (3/6)

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் கடமையாற்றும் **திருமதி சொரூபி அநவரதன்** அவர்களின் அன்புத் தந்தையார்

### அப்புத்துரை நடராசா

05.04.2022 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார். அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை**

## நல்லடக்க ஆராதனை அறிவித்தல்

"கிறிஸ்து எனக்கு ஜீவன்,
சாவு எனக்கு ஆதாயம்" பிலிப்பியர் 1:21

மண்ணில் 09 . 11 . 1923



மகிமையில் 04 . 04 . 2022

### திருமதி எலிசபெத் விக்ரர்


04-04-2022 திங்கட்கிழமை திருமதி.எலிசபெத் விக்ரர் அவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை 06-04-2022 புதன்கிழமை காலை 9:00 மணிக்கு கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலய காரியாலய வளாகத்தில் (89.பிறவுண் வீதி, கொக்குவில்) நடைபெற்று இறுதி நல்லடக்கத்திற்காக தாவடியில் அமைந்துள்ள கல்வாரித் தோட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**தகவல் :**
**போதகர்.லெஸ்லி மத்தியுஸ், சாந்தி மத்தியுஸ் குடும்பத்தினர்**

(CS 19205) (3/6) **தொடர்பு : 077 734 4265**

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 06 1969



மறைவு 02 04 2022

### திருவாளர் நவரத்தினசிங்கம் வாகீசன்
### {B.Sc. Eng (Hons), ACMA}

சாமியன் அரசடி கரவெட்டியை பிறப்பிடமாகவும்
கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட
திருவாளர் நவரத்தினசிங்கம் வாகீசன் {B.Sc. Eng (Hons), ACMA}
02.04.2022 அன்று கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை நவரத்தினசிங்கம் (இலங்கை மத்திய வங்கி) மற்றும் வேதநாயகி (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் கனிஷ்ட புதல்வரும், காலம் சென்றவர்களான குலரத்தினம் புஷ்பராணி தம்பதிகளின் அருமை மருமகனும், ரஜினியின் அன்பு கணவரும், யதுஷா, விதுஷன், மிதுஷன் ஆகியோரின் அன்பு தந்தையும், Dr.ஜனகன், சுரேந்திரன் (பொறியியலாளர்), ஜசோதா (USA) ஆகியோரின் அன்பு சகோதரனும், சுபோதினி, யசோதா, விநாயகமூர்த்தி (USA), தர்ஷினி (USA) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சிவயோகநாதன், ஆனந்தசிகாமணி, சிவக்கொழுந்து மற்றும் தெய்வசிகாமணி, சிற்றம்பலநாதன் ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான தணிகாசலம், பூலோகசிங்கம் மற்றும் விக்னராஜா, செல்வநாயகி ஆகியோரின் அன்புப் பெறாமகனும் ஆவார்.

**அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக 06 .04 .2022 புதன்கிழமை காலை 08.00 மணி முதல் கல்கிசை மஹிந்த மலர் சாலையில் வைக்கப்பட்டு தகன கிரியைகளுக்காக பிற்பகல் 1.30 மணியளவில் கல்கிசை மயானத்துக்கு எடுத்து செல்லப்படும்.**

இவ் அறிவித்தலை உற்றார் மற்றும் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

**தகவல்:- ந.சுரேந்திரன் (சகோதரன்) - வா. விதுஷன் (மகன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்சக்களை வீட்டுக்கல்ல சிறைக்கே அனுப்பவேண்டும்

**கொழும்பு, ஏப். 6**
**'கோ ஹோம் கோத்தா' என்று கோஷம் எழுப்பப்படுகின்றது. ஆனால் உண்மையில் ராஜபக்சக்களை ஆட்சியிலிருந்து வீட்டுக்கு அல்ல சிறைக்குத்தான் அனுப்ப வேண்டும்.**

இவ்வாறு இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மார்வன் அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.
இதேவேளை நேற்றைய தினம் போராட்டக்காரர்கள் சிலர், 'கோத்தா நாட்டுக்கும் வீட்டுக்கும் கேடு' என்ற கோஷத்தையும் எழுப்பினர்.
பல இடங்களில் அருவருக்கதக்க வார்த்தைகளைப் பயன்படுத்தியும் ராஜபக்சக்கள் மீது போராட்டக்காரர்கள் வசைமாரி பொழிந்து வருகின்றனர். (ஒ-5)

## உதயன் செய்திக்கு ரெலோவின் விளக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 6
இடைக்கால அரசை உடனே அமைக்க வேண்டும் என்று தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பவுள்ளன என்று உதயன் பத்திரிகையில் நேற்றுமுன்தினம் வெளியான செய்திக்கு தமிழ் ஈழ விடுதலை இயக்கம் ரெலோ மறுப்புத் தெரிவித்துள்ளது.
அவ்வாறு ஒரு கடிதம் எழுதப்படவில்லை என்றும், உண்மைக்குப் புறம்பான செய்தி என்றும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் பேச்சாளர் சுரேன் குருசாமி உதயன் பத்திரிகைக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.
*இது தொடர்பான உண்மை நிலைமை இன்றைய பட்சியில் குறிப்பிடப்பட்டுள்ளது.* (ஆ-ர்)

## விபத்துக்குள்ளான மருத்துவர் சாவு!

வவுனியா, ஏப். 6
விபத்துக்குள்ளாகியிருந்த வவுனியா பிராந்திய தொற்றுநோயியல் மருத்துவர் லவன் (வயது - 58) நேற்று உயிரிழந்துள்ளார்.
வவுனியா பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவின் தொற்று நோயியல் நிபுணராகவும், மாவட்ட கொவிட் கட்டுப்பாட்டு செயலணி உறுப்பினராகச் செயற்பட்டு வந்த மருத்துவர் லவன், கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் வீட்டில் ஏற்பட்ட விபத்தில் தலையில் காயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தார்.
மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் கொண்டு செல்லப்பட்டு மீண்டும் வவுனியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார். (ஒ-18)



## குளத்தை அளவிடச் சென்றவர் படகு கவிழ்ந்து பரிதாபச் சாவு

முல்லைத்தீவு, ஏப். 6
முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏம்பல் குளத்தை அளவீடு செய்வதற்காக படகில் சென்ற உத்தியோகத்தர், படகு கவிழ்ந்ததில் உயிரிழந்துள்ளார்.
ஒட்டுசுட்டான் வித்தியாபுரத்தைச் சேர்ந்த நமசிவாயம் டிலக்சன் (வயது - 25) என்பவரே உயிரிழந்துள்ளார். இவர் ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினருமாவார்.
நேற்று பிற்பகல் 3 மணியளவில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள ஏம்பல் குளத்தை அளவீடு செய்வதற்காக சென்ற வேளை படகு கவிழ்ந்துள்ளது.
சம்பவம் தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸார் மற்றும் பொதுமக்கள் இணைந்து சடலத்தை மீட்டு முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் ஒப்படைத்தனர். (ஒ-19)

## பேருந்து ஏறியதில் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப். 6
பேருந்தின் முன்சில்லுக்கு அருகில் படுத்திருந்தவர் மீது பேருந்து ஏறியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பன்னாலைக் கட்டுவனில் இரவு 8 மணியளவில் நடைபெற்றுள்ளது.
ஊரெழு கிழக்கு ஊரெழுவைச் சேர்ந்த தர்மலிங்கம் சதீஸ் (வயது -37) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
புன்னாலைக்கட்டுவனில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசல் நிரப்புவதற்காக பேருந்து வரிசையில் நின்றுள்ளது. இதன்போது பேருந்தின் முன்சில்லின் முன்பாக ஒருவர் படுத்திருந்துள்ளார். வரிசையில் நின்ற வாகனங்கள் நகரும்போது, பேருந்தும் இயக்கப்பட்டுள்ளது. பேருந்து முன்பாக படுத்திருந்தவரை அவதானிக்காது சாரதி பேருந்தை இயக்கியதாக விசாரணையின் போது கூறப்பட்டுள்ளது. இதனால் பேருந்து அவர் மீது ஏறியது. அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.
சம்பவம் தொடர்பில் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். (ஒ-26)

## கோத்தாவை ஆட்சிக்கு கொண்டு வந்தோரும் வீடு செல்ல வேண்டும்

*சரத் பொன்சேகா கோரிக்கை*

கொழும்பு, ஏப். 6
கோத்தா மாத்திரம் வீட்டுக்கு செல்லக்கூடாது. அவரைக் கொண்டு வந்தவர்களும் வீடுகளுக்குச் செல்லவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கோரிக்கை விடுத்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர், 'கோ ஹோம் கோத்தா' என்ற சுலோகத்தை மாத்திரம் கூறுவதால் எதனையும் சாதிக்கமுடியாது.
அவரை ஜனாதிபதியாக்கியவர்களும் இன்றைய நிலைமைக்கு பொறுப்புக்கூற வேண்டும். கப்பல் கவிழப்போகிறது என்றவுடன் 'அவன்ட் காட்' தலைவர் நாட்டில் இருந்து தப்பிச் சென்றுள்ளார். இதேவேளை இடைக்கால அரசு தற்போதைய பிரச்சினைக்கு தீர்வாகாது- என்றார் அவர். (ஒ-இ)

## காணி சுவீகரிப்பை தடுக்க ஒன்றிணைக

யாழ்ப்பாணம், ஏப். 6
கடற்படையினரின் தேவைக்காக பொதுமக்களின் காணிகளை எழுவைதீவில் சுவீகரிப்பதற்கான நிலஅளவை இன்று காலை மேற்கொள்ளப்படவுள்ளது.
எனவே அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு பொதுமக்களையும் காணி உரிமையாளர்களையும் ஒன்றிணையுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

## வாந்தியால் குழந்தை உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப். 6
வாந்தி மற்றும் வயிற்றுக் குத்து காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மூன்றரை வயதுக் குழந்தை நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளது. உரும்பிராய் கிழக்கு உரும்பிராயைச் சேர்ந்த சந்திரமோகன் சாஜித் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.
கடந்த 3ஆம் திகதி வாந்தி மற்றும் வயிற்றுக் குத்து காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் குழந்தை சேர்க்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் மாலை குழந்தை உயிரிழந்துள்ளது.
திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். (ஒ-26)

## நிலையான அரசு அமையவேண்டும்

*விமல் கோரிக்கை*



கொழும்பு, ஏப். 6
நாட்டில் உள்ள தற்போதைய அரசு மாறி நிலையான அரசொன்றை நிறுவவேண்டும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ வலியுறுத்தினார்.
நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
'எமது கூட்டணியில் உள்ள 10 அரசியல் கட்சிகளும் அதில் உள்ள [illegible] நாடாளுமன்ற உறுப்பினர்களும் முன்பு போலவே தொடர்ந்தும் சுயாதீனமாகச் செயற்படுவதற்குத் தீர்மானித்துள்ளோம் என குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பெரும்பான்மையை...

பெரும் பரபரப்புக்கு மத்தியில் நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு கூடியது. இதன்போது சுயாதீனமாகச் செயற்படவுள்ளதாக சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் 43 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறிவித்தனர். அவர்களில் மூவர் பின்னர் 'பல்டி' அடித்தனர். இதனால் 40 பேர் மாத்திரமே சுயாதீனமாக இயங்கவுள்ளனர்.
இதேவேளை, கடந்த காலங்களில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கு எதிரணியிலிருந்து ஆதரவளித்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள் எந்தவொரு நிலைப்பாட்டையும் அறிவிக்கவில்லை. இதனால் ராஜபக்ச அரசின் சாதாரண பெரும்பான்மை பலமான 113 என்பது ஊசல் நிலையிலேயே உள்ளது.
கடந்த 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுன கூட்டணிக்கு தேசியப் பட்டியல் ஆசனங்கள் உள்ளடங்கலாக 145 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றன. பங்காளிக் கட்சிகளின் ஆதரவுடனும், எதிர்த்தரப்பிலிருந்து கட்சி தாவியோரின் ஆதரவுடனும் 159 ஆசனங்கள் என்ற நிலைமையை எட்டியது. மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துடன் ராஜபக்ச அரசாங்கம் இதுவரை இருந்து வந்தது.
இந்த நிலையில் நேற்றைய தினம் 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது ஆதரவை அரசுக்கு வழங்குவதிலிருந்து விலக்கிக் கொண்டுள்ளனர். அவர்கள் எதிரணியுடனும் சேராமல் சுயாதீனமாக இயங்கவுள்ளனர்.
தற்போது ராஜபக்ச 119 என்ற நிலையில் இருந்தாலும் கூட, அவர்களில் எதிரணியிலிருந்து இதுவரை ஆதரவு வழங்கிய 9 பேர் எந்த நிலைப்பாட்டை எடுப்பார்கள் என்பது தெரியவரவில்லை. இதனால் நாடாளுமன்றத்தில் எந்தவொரு தரப்புக்கும் பெரும்பான்மை இல்லாது தொங்கு நிலைமை தோன்றியுள்ளது.

**சுயாதீனத் தரப்புக்கள்**

விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, அதாவுல்லா, வாசுதேவ நாணயக்கார உட்பட 10 கட்சிகளின் சார்பில் 15 பேரும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் 14 பேரும், அநுரபிரியதர்ஷன யாப்பா, சுசில் பிரேமஜயந்த உட்பட அவர்கள் அணியின் சார்பில் 9 பேரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர் இருவரும் அரசாங்கத்துக்கான ஆதரவை மீளப்பெற்றுள்ளனர்.

**கட்சித் தலைவர்கள் கூட்டம்**

இதேவேளை நாடாளுமன்றம் இன்று முற்பகல் 10 மணி வரை ஒத்திவைக்கப்பட்டு கட்சித் தலைவர்களுக்கான விசேட கூட்டம் நேற்று மாலை 4 மணிக்கு நடைபெற்றது. இதன்போது நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் இரு நாள்கள் விவாதம் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

**ஜனாதிபதி - சு.க. சந்திப்பு**

நாடாளுமன்ற அமர்வு முடிவடைந்த பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும் இடையில் முக்கிய சந்திப்பு நடைபெற்றது. சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர, சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை. அத்துடன் அவசரகாலச் சட்டத்துக்கு எதிராக எமது கட்சி வாக்களிக்கும்- என்றார். (அ-ஔ,5,44)

### அவசரகாலச்...

பல தரப்பினரும் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர். அத்துடன் அதனை வாக்கெடுப்புக்கு நாடாளுமன்றில் முன்வைக்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. வாக்கெடுப்புக்கு விடப்பட்டால், சிறிலங்கா சுதந்திரக் கட்சி அதனை எதிர்க்கும் என்று தெரிவித்திருந்தது. மேலும் நாடாளுமன்றத்தில் ராஜபக்ச அரசுக்கு பெரும்பான்மை ஊசலாடும் நிலையில், இதனை வாக்கெடுப்புக்கு முன்வைத்து அதில் தோல்வியடைந்தால் அரசுக்கு பெரும்பான்மை இல்லாதமை உறுதிப்படுத்தப்படும். இவ்வாறானதொரு பின்னணியிலேயே அதனை மீளப் பெறும் வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நேற்று இரவு வெளியிட்டுள்ளார். (அ-ஔ-5)

### பிரதமரின்...

இரண்டாவது நாளாகவும் போராட்டக்காரர்களால் முற்றுகையிடப்பட்டது. பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றிணைந்து நேற்று மாலை போராட்டத்தை ஆரம்பித்தனர். சிறிது நேரத்தில் பல்லாயிரக்கணக்கானவர்கள் அங்கு ஒன்று கூடி எதிர்ப்பு வெளியிட்டனர்.
இதன் காரணமாக பிரதமரின் இல்லத்தைச் சுற்றி பொலிஸ், விசேட அதிரடிப் படை, இராணுவம் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. இதே வேளை நேற்றுமுன்தினம் இரவு தங்காலையில் உள்ள பிரதமரின் கார்ல்டன் இல்லம் சுற்றி வளைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ஔ-இ)

### துப்பாக்கிகளுடன்...

கடற்ற மோட்டார் சைக்கிள்களில் ஆயுதம் தாங்கியவர்கள் நுழைந்தனர். எனினும் அவர்களைப் போராட்டக்காரர்கள் விரட்டியடித்தனர். அத்துடன் பொலிஸாரும் அவர்களை கடுமையாக எச்சரித்து திருப்பி அனுப்பினர்.
ராஜபக்ச அரசுக்கு எதிரான மக்களின் தன்னெழுச்சிப் போராட்டம் விஸ்பரூபம் எடுத்து வருகின்றது. நாடாளுமன்றம் நேற்றுக் கூடிய நிலையில், நாடாளுமன்றத்துக்கான அனைத்து நுழைவாயில்களிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. மக்கள் அமைதியான முறையில் பொலிஸ் தடுப்புக்களுக்கு வெளியே நின்று போராடினர்.

இதன்போது இலக்கத்தகடற்ற 5 மோட்டார் சைக்கிள்கள் அந்தப் பகுதிக்குள் நுழைந்தன. அவர்கள் கறுப்புநிற சீருடையணிந்திருந்தனர். கனரகத் துப்பாக்கிகளையும் ஏந்தியிருந்தனர். மோட்டார் சைக்கிள்களுடன் அதிவேகமாகப் பிரவேசித்த அவர்களை போராட்டக்காரர்கள் மறித்து தாக்கினர். போராட்டக்காரர்களின் தாக்குதலில் இருந்து ஆயுதாரிகள் தப்பித்து ஓடினர். இன்னுமோர் மோட்டார் சைக்கிளை பொலிஸார் மறித்தபோதும் நிற்காமல் தப்பிச் செல்ல முயன்றனர். ஆனால் பொலிஸார் சுற்றிவளைத்து பிடித்து விசாரணைகளை முன்னெடுத்தனர். இதன்போது அவர்கள் பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்தவர்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அவர்களை திரும்பிச் செல்லுமாறு கடும் எச்சரிக்கையுடன் பொலிஸார் அனுப்பி வைத்தனர். இலக்கத்தகடற்ற வாகனங்களில் துப்பாக்கி களுடன் போராட்டக்காரர்களின் இடத்துக்குள் படையினர் நுழைந்தமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (அ-ஔ-5)

### இலக்கத்தகடற்ற...

தின் போது இலக்கத்தகடற்ற மோட்டார் சைக்கிள்களில் ஆயுதங்களுடன் வந்தவர்கள் இராணுவத்தினரே. அவர்களை தடுத்து விசாரணைக்கு உட்படுத்தி எச்சரிக்கை செய்த பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, பொலிஸ்மா அதிபரைக் கோரியுள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ-ஔ-5)



சுன்னாகத்தில்...

### ஓயாத...

வாகவும் போராட்டங்கள் நடத்தப்பட்டன. மக்களின் போராட்டங்கள் காரணமாக பல வீதிகளில் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளன.
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் மீரிஹான இல்லத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து நாட்டில் போராட்ட அலை சூடுபிடிக்கத் தொடங்கியது. அவசரகால நிலைமை பிரடகனம், ஊரடங்கு என்று அடக்குமுறைகளை அரசு ஏவியபோதும் அதனையும் மீறி பல்வேறு தரப்பினரும் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். (அ-ஔ-5)

### வீடுகளிலிருந்து...

களால் ஆளும் கட்சியின் முன்னாள் அமைச்சர்கள், தமது வீடுகளை விட்டு வெளியேறி ஹோட்டல்களில் தஞ்சமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சுமார் 20 பேர் வரையில் இவ்வாறு குடும்பத்துடன் ஹோட்டல்களில் தங்கியுள்ளனர்.
நேற்றுமுன்தினமும், நேற்றும் முன்னாள் அமைச்சர்களின் வீடுகளை இலக்கு வைத்து போராட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஔ-இ)

## மீண்டும் மீண்டும் 'ஞானக்காவின் வீட்டை' இலக்கு வைக்கும் மக்கள்

கொழும்பு, ஏப். 6
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் சோதிடரான அநுராதபுரத்தைச் சேர்ந்த ஞானக்காவின் வீட்டை போராட்டக்காரர்கள் நேற்றிரவும் முற்றுகையிடுவதற்கு முயற்சித்துள்ளனர். இதனால் இராணுவத்தினரைக் களமிறக்கி நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.
கடந்த சனிக்கிழமை ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா, ஞானக்காவின் வீட்டை முற்றுகையிடச் சென்றபோது பொலிஸாரால் தடுக்கப்பட்டிருந்தார். நேற்றுமுன்தினம் இரவு பொதுமக்கள் தன்னெழுச்சியாக ஒன்றிணைந்து ஞானக்காவின் வீட்டை நோக்கி பேரணியாகச் சென்றனர். பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் அதைத் தடுத்து நிறுத்தினர். இந்த நிலையில் நேற்று இரவும் அவரது வீட்டை முற்றுகையிடுவதற்கு போராட்டக்காரர்கள் முயன்றுள்ளனர். (அ-ஔ-5)


## ஈஸ்டர் தாக்குதல்காரருக்கு தேவசாபத்தால் இந்தக் கதி!

### நாடாளுமன்றில் குமார வெல்கம வெளிப்படைப் பேச்சு

கொழும்பு, ஏப். 6
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் தேவ சாபத்துக்கு உள்ளாகியுள்ளனர். அதனால்தான் வீதியில் இறங்கி செல்லமுடியவில்லை. 'கோ ஹோம் கோத்தா' என்ற கோஷம் எல்லா இடங்களிலும் ஒலிக்கின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது,
'கோத்தா கோ ஹோம்' என்ற விடயத்தை நான்தான் முதன் முதலில் வலியுறுத்திக் கூறினேன். அவரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டேன். பிரதேசசபையில்கூட அங்கம் வகிக்காத அவரை வேட்பாளராக களமிறக்க வேண்டாம் என அழுத்திக் கூறினேன். ஆனால் குடும்ப உறுப்பினர் ஒருவரை களமிறக்க வேண்டும் என்பதற்காக மஹிந்த ராஜபக்ச தவறான முடிவை எடுத்தார். அந்தத் தவறான முடிவால் தான் நாடு இன்று பற்றி எரிகின்றது. கோத்தா போட்டியிட்டதால் நான் அரசிலிருந்து வெளியேறினேன்.
மைத்திரிபால சிறிசேன சொல்வதெல்லாம் பொய். 19 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் இன்று கதைக்கின்றார். ஆனால் 20 ஆவது திருத்தச்சட்டத்துக்கு அவரின் கட்சி உறுப்பினர்கள் ஆதரவு வழங்கினர். எனக்கும் அமைச்சுப் பதவி தருவதாகச் சொன்னார்கள். ஆனால் நான் செல்லவில்லை.
அதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புபட்டவர்கள் தேவ சாபத்துக்கு உள்ளாகியுள்ளனர். இந்தக் கூற்றை இல்லையெனச் சொல்ல வேண்டாம், தொடர்புபடாத நீங்களும் சாபத்துக்கு உள்ளாக வேண்டிவரும். இன்று வீதியில் இறங்கி செல்ல முடியவில்லை. 'கோ ஹோம் கோத்தா' என மக்கள் கூச்சலிடுகின்றனர். மஹிந்தவை மக்கள் மன்னர்போல்தான் கருதினர். அவரும் தேவ சாபத்துக்கு உள்ளாகியுள்ளார்- என்றார். (அ-ஔ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு வாரங்களுக்கான மருந்துகளே இருப்பில்



கொழும்பு, ஏப். 6

சுமார் இரண்டு வாரங்களுக்குப் போதுமான மருந்துகளே அரச மருந்துவமனைகளில் இருப்பில் உள்ளன என்று அரச மருந்தாளர் சங்கத்தின் தலைவர் அஜித் திலகரத்ன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் இரண்டு வாரங்களில் டொலர் நெருக்கடிக்குத் தீர்வு காணப்படாவிடின், அரச மருத்துவ மனைகளுக்குத் தேவையான மருந்துகளின் விநியோகம் நிறுத் தப்படும் அபாயம் ஏற்படும். அத்துடன் மருத்துவர்கள் பரிந் துரைக்கும் அனைத்து மருந்து களையும் வெளியில் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை உரு வாகும் என்றும் அவர் தெரிவித் துள்ளார். (ஒ-க,இ)

---

## பெரும்பான்மையை...

சின் பெரும்பான்மையை நிரூபிக்கக் கோரும் பிரேரணை சிலவேளைகளில் நாடாளுமன்றில் முன்வைக் கப்படலாம் என்று அறியமுடிகின்றது. ஐக்கிய மக்கள் சக்தியால் இந்தப் பிரேரணை இன்று அல்லது நாளை சமர்ப்பிக்கப்படலாம் என்று கூறப்படுகின்றது.

அவசரகாலச் சட்டம் தொடர்பில் நாடாளுமன்றில் வாக் கெடுப்புக்கு விடப்படவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நேற்று மாலை இடம்பெற்ற விசேட கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் வலியுறுத்தியபோதும் அதற்கு இடமளிக்கப்படவில்லை. நாடாளுமன்றத்தில் வாக் கெடுப்பு நடத்தப்படும் சந்தர்ப்பத்திலேயே அரசின் பெரும்பான்மை இழக்கப்பட்டுள்ளதா என்பதை உறு திப்படுத்தமுடியும்என்பதுகுறிப்பிடத்தக்கது. (அ-ஓ-5,22)

## நிறைவேற்றதிகார...

யுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதர வளித்தவர்கள்தான், இன்று எதிர்த்து நிற்கின்றனர். எனவே, தற்போது 20ஐ அல்ல, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான நேரம் வந் துள்ளது. அதனை நாம் செய்தாக வேண்டும். அதிகா ரங்கள் பிரதமருக்கு பகிரப்பட வேண்டும். ஆனால் நிறைவேற்று அதிகாரப் பிரதமரை உருவாக்காத வகை யில் அதிகாரங்கள் சமப்படுத்தப்பட வேண்டும். அப் போதுதான் ஜனநாயகம் கோலோச்சும்.

ஜனாதிபதி பதவி விலகவேண்டும் என மக் கள் வலியுறுத்திவருகின்றனர். எனவே, மக் கள் கோரிக்கைக்கு செவிசாய்த்து, அரசாங் கமும் ஜனாதிபதியும் பதவி விலகவேண்டும்- என்றார். (அ-ஓ-44)

## எரிபொருள்...

கப்பலும் நேற்று நாட்டை வந்தடைந்தது. நாளை மறுதினம் 8ஆம் திகதி மற்றுமொரு எரிபொருள் தாங்கிய கப்பல் நாட்டை வந்த டையவுள்ளது. அந்தக் கப்பலில், 40 ஆயி ரம் மெற்றிக் தொன் எரிபொருள் நாட்டுக்கு கொண்டு வரப்படவுள்ளது. (ஒ-இ)

## ஒரேநாளில்....

நேற்று அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரி வித்துள்ளார். அத்துடன் தேசியப் பட்டியல் உறுப்புரிமையிலிருந்தும் விலகுவதற்கு அவர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

கடந்த 3ஆம் திகதி அமைச்சர்கள் அனைவ ரும் பதவி விலகினர். நீதி அமைச்சராகப் பதவி வகித்த அலி சப்ரியும் பதவி விலகி யிருந்தார்.

நேற்றுமுன்தினம் 4 அமைச்சர்கள் பதவி யேற்றனர். அல் சப்ரி நிதி அமைச்சராக நிய மிக்கப்பட்டார். இந்த நிலையில் நேற்றுக் காலை பதவி விலகுவதாக அவர் அறிவித் துள்ளார். இதேவேளை, நிதி அமைச்சின் செயலர் ஆட்டிகலவும் நேற்றுப் பதவி விலகி யுள்ளார். (ஒ-இ)

## மூன்றாம் கட்ட மண்ணெண்ணெய் தென்மராட்சி கிழக்கில் விநியோகம்

தென்மராட்சி, ஏப்.6

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் சங்க எல்லைக்குட்பட்ட 19 கிளைக் கடைகள் மற்றும் கொடிகாமத்தில் உள்ள எரிபொருள் நிலையம் ஆகியவற்றில் மூன் றாம் கட்ட மண்ணெண்ணெய் விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது என சங்கப் பொது முகாமையாளர் சி.தேவகுமாரன் அறிவித் துள்ளார்.

அதன்படி மூன்றாம் கட்ட மண்ணெண்ணெய் விநியோகம் அந்தந்தக் கிளைக் கடைகளில் தலா ஒரு லீற்றர் வீதம் வழங்கப்படுகின் றது.

மேலும் சங்க எல்லைக்குட்பட்ட 28 கிராம அலுவலர் பிரிவுகளில் மேட்டு நிலப் பயிர்ச்செய் கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்குமாறு கமக்கார அமைப்புகள் கோரியதையடுத்து கமநலசேவைகள் நிலையத்தின் உறுதிப் படுத்தலுடன் இரண்டாம் கட்டமாகத் தலா ஐந்து லீற்றர் வீதம் விநியோகம் மேற்கொள்ளப்படு கிறது. (ச-9)


### வேலையாள் தேவை

யாழ். பெரியவிளானில் இருவர் அடங்கிய குடும்பத்திற்கு தங்கி நின்று வீட்டு வேலை செய்வதற்கு வேலை யாள் தேவை.

(CS 43981) (3/6) 077 191 1539

### INFORMATION TECHNOLOGY Park

*Jaffna, Srilanka*
*Under the purview of the Ministry of Technology*

MPCS Building,
127,K.K.S.Road, Jaffna, Srilanka

Office :- 021 222 3641
Fax No :- 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

2022 APRIL BATCH

- Dip.in Microsoft Office
- Dip.in Desktop publishing
- Dip.in Information Technology
- Dip.in Computer Programming

06 Month Online Course

- Dip.in PC Application & Office Management

06 Month Languages

- VB.net
- PHP
- C/C++
- C#
- Java
- AotoCAD

20 Hours Workshops

- Internet & e-mail
- Webpage Designing & Development

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்

வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :- 22.04.2022
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :- 23.04.2022

CENTRE FOR INFORMATION TECHNOLOGY

(CR 37798) (3/6) - Executive Officer -

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மறவன்புலத்தில் 45 பரப்புக்காணி விற்பனைக்கு (நிலப்பரப்பு)) மறவன்புலம் மாவடி சந்திக்கு அருகாமை

- 16 அடிப்பாதையுடன்
- இரண்டு பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம்-பூநகரி பிரதான வீதியில் (A-32) இருந்து 200M தூரத்தில்
- சகலகலாவல்லி வித்தியாலயம் அருகாமை
- நாவற்குழி சந்தியில் இருந்து 2 1/2 KM தூரம் (A-9)
- நல்ல தண்ணீர் கிராமம் (மணல் மண்)
- அதிக குடியிருப்புக்கள் சூழல் உள்ள காணி (நல்ல சூழல்)
- ஒருபரப்பின் விலை (300000/=) மூன்று லட்சம் மட்டும்.

தொடர்பு :
074 291 3725 /074 291 3726/074 291 3727

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 35 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

சுண்டிக்குளம் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் A32 பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி. A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன. 14 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் 5 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது. நல்ல தண்ணீர் கட்டுக் கிணற்றுடன் பயன்தரும் 120 தென்னைகள் உள்ளன.

பார்வையிடும் நேரம்

காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை,
ஒரு பரப்பின் விலை 450000.00
(தரகர் தேவையில்லை)

ஜெயம்:-
077 814 7389, 077 241 7589

### அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 30 . 03 . 1948
மறைவு 08 . 03 . 2022

கடந்த 08.03.2022 அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

**அமரர் குமரகுரு கமலாதேவி**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (07.04.2022) வியாழக்கிழமை அதிகாலை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

இறுதிக்கிரியைகளில் கலந்து ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆலடி வடக்கு,
ஆதிகோவிலடி,
வல்வெட்டித்துறை.

(CS 18229) (3/6)

குடும்பத்தினர்
077 271 6367


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021 493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.